# காந்தி மகான்

# நற்சிந்தனை



மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ இல: 77
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

காந்தி மகான்

தந்த

# நாளொரு நற்சிந்தனை

# 365

ஆங்கிலத்திலிருந்து ஒரு சிவதொண்டன்
மொழிபெயர்த்தது

1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு 1974

அச்சுப்பதிவு:
ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"தருமமென் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் இனிதின் ஆக்குமால்
அருமையின் வரும்பொரு ளாகு மன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ"

கந்தபுராணம் — காசிபர் உபதேசம்.

A. (i) கடவுளை யறிவது, ஆன்மாவை அறிவது எத்துணை அரிய காரியமோ. அவ்வாறே தருமத்தை அறிவதும் அத்துணை அரிய காரியமாம்.

(ii) உண்மைச் சமயத்தின் தொடக்கம் தருமம்.

(iii) (a) வேதத்தின் ஞானகாண்டத்தை ஆராய்ந்தது பிரமமீமாம்சை எனப்படும் உத்தரமீமாம்சை.

வேதத்தின் கன்மகாண்டத்தை ஆராய்ந்தது கன்மமீமாம்சை எனப்படும் பூர்வமீமாம்சை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(b) கன்மம் ஞானநிமித்தம்.

(c) கன்ம சுத்தியால் ஞானம் பிறக்கும் என்பர்.

(d) உத்தரமீமாம்சை பிரமத்தை அறிய ஆசை என்று தொடங்குகின்றது: பூர்வமீமாம்சை தர்மத்தை அறிய ஆசை என்று தொடங்குகின்றது.

கர்மத்தின் மூலவேர் தர்மம். தர்மத்தை அறிந்து கர்மசுத்தி யெய்தி ஞானத்தை அடைந்தவன், பிரமத்தை அறிந்து பிரமம் ஆகின்முன். ஆதல் ஆவது பிரம மயமாதல்.

இவ்வாற்ருல் தருமத்தின் அருமை புலமாம்.

(iv) இராவணன் கைலேயின்கீழ் அகப்பட்டுப் பத்து வாயுந் திறந்தலறினுன்: கைலேச் சாரலில் தவமிருந்த வாகீசமுனிவர்க்குத் தவம் குழம்பி இரக்கம் மேலிட்டது. விரைந்து சென்று புத்தி சொன்னுர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் தன்னரம்பில் நாதமெழச் சாமவேத கானஞ் செய்தான்: கைலை உருகிற்று. கைலாசபதி அவனுக்கு அநுக்கிரகித்தார். அதன்மேல் வாகீசர் சந்நிதியை அணுகினர். சர்வசீவ தயாநிதியாய கைலாசபதி வாகீசரை நோக்கி, "வாகீசனே! நீ என்னிலும் பார்க்க இரக்கமுள்ளவனுயிருக்கிருய். நீயும் என்னைப் பாடு; பூமியிலே பிறந்து பாடு" என்று ஆஞ்ஞை செய்தருளினர். அதனல் வாகீசர் திருநாவுக்கரசராயினர்;

இறைவன் சந்நிதியில் இறைவன் கருத்தறியாது இரங்கியது சந்நிதி விரோதமாய்த் தருமத்துக்குப் புறம் ஆயிற்று. சமண இருளிற் புகுதலும் நேர்ந்தது.

இக்கதை கர்ண பரம்பரைக் கதையாயினும், பொருத்தமான கருத்துள்ள கதை.

'கூற்ருயின வாறு' என்று தொடங்கும் பதிகத்தில், 5-ம் பாடலின் தொடக்கமான, 'காத்தாள்பவர் காவல் இகழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையால்' என்ற தொடரும், 'கடுகிய தேர் செலாது கயிலாயமீது' என்ற பாடலில்,

'.........விரைவுற்றரக்கன் வரையுற்
றெடுக்க முடிதோள்
நெடுநெடு விற்றுவீழ விரலுற்றபாத
நினைவுற்றதென்றன் மனனே'

என்ற பகுதியும் வாகீசர் கதையை மெய்ப்பிக்கத்தக்கவை. எடுத்த பாதம்போலவே ஊன்றிய பாதமும் அநுக்கிரக பூர்வமானதென்றவாறு.

(v) சம்பந்தப் பிள்ளையார், 'அத்தனே திருவாலவாயாய் அமணர் சித்தரை அழிக்கத் திருவுள்ளமே' என்று இறைவன் கருத்தறிதல் ஈண்டுச் சிந்திக்கற்பாலது: மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அழுதழுது அழைக்கவும் பிள்ளையார் இறைவன் கருத்தை வேண்டி நின்றமை தருமத்தின் பெருமையைக் காட்டுகின்றது.

(vi) 'அரன்தன் பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம் வீண் செயல்' என்ற சித்தியா

ரும், தீவினையோடொப்ப நல்வினையையும் வைத்து, 'இருள்சேர் இருவினை' என்ற திருவள்ளுவரும் தருமத்தின் இன்றியமை யாச் சிறப்பை விளக்குவனவாகும்.

(vii) தருமந் தெரியாது முட்டுற்றுழித் தசரதன் போல்வார், வசிட்டர் போன்ற முனிவர் களை விசாரிப்பது இதிகாசங்களிற் காணத் தக்கது. இறைவன் கருத்தறிந்து தருமம் சொல்ல வல்லோர் நீத்தாரே என்பதாம்.

திருவள்ளுவரில் நீத்தார் பெருமை பொருட்பாலின் திறவுகோல் என்பதும் உணர்தற்பாலது.

B. (i) இனி மனிதத் தெய்வமாகிய காந்திஜியை அணுகுவோம்.

காந்திஜியின் ஒவ்வொரு மூச்சும் தெய் வப் பிரார்த்தனையோடு கூடியது. மக்கள் சேவையை மேற்கொண்டார் மகாத்மா. ஏழைகள் மத்தியிற் பரம ஏழையாயிருந்து சேவிக்க விரும்பியவர் மகாத்மா; தரித் திர நாராயணன் என்று தமக்குத் தாமே பட்டஞ் சூட்டிக்கொண்டவர் மகாத்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) காந்திஜியின் கருத்தொன்று (ராஜாஜியின் மொழிபெயர்ப்பு) நீண்ட காலம் என் சிந்தனையில் இருந்து வருகின்றது;

'ஓர் உயிர் துடிதுடிக்கின்றது: பரிபூரண ஞானி ஒருவன் பார்த்துக்கொண்டிருக்கின்றான்; அப்படியிருக்க என்னால் முடியவில்லை. அந்த உயிருக்கு இரங்காமலிருப்பவர்களில் எனக்குக் கோபமும் வருகிறது' என்பதே அந்தக் கருத்து.

(iii) இக்கருத்தில், ஞானி ஏன் சும்மா இருக்கிறான் என்பது பெரிதும் ஆராயற்பாலது. அது நிற்க, இரக்கம் தெய்வச் சொத்து. இரக்கத்தை அழிப்பது பாவம்: ஆகவே, இரங்கத்தான் வேண்டும். அவ்விரக்கம் துடிதுடிக்கும் உயிருக்கு நன்மை பயக்குமா என்பது ஆராயற்பாலது; தீமை பயக்குமாயின், குளிக்கப் போய்ச் சேறு பூசியதாகும். ஆகவே, என்ன செய்வதென்பது பெரிய கேள்வி. பரமஞானிகள்போல் நாங்களும் சும்மா இருந்தால் இரக்கத்தை அழிப்பதாகுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) காந்திஜியின் மதிப்புக்குரியவர்களில் டால்டாய் ஒருவர்: அவர், 'உனக்கு நன்மை செய்யத் தெரியுமா?' என்ற கேள்விக்குறியில் ஒரு கதை எழுதியிருக்கிறார்.

'கணவனை யிழந்த, எவர் ஒருவர் உதவியுமில்லாத ஏழையொருத்தி இரு பிள்ளைகளை ஒருங்கு பிரசவிக்கின்றாள். யமதூதன், அவள் உயிரை எடுக்கப் பறந்து வருகின்றான். பிள்ளைகளின் பாதுகாப்பை முன்னிட்டுத் தன்னைச் சிறிதுகாலம் உயிர் வாழ வைக்க வேண்டுமென்று அவள் மன்றாடுகின்றாள். தூதன்பால் இரக்கம் குடிகொண்டது. கை பதறியது. அதேகணத்தில் மற்றொரு தூதன் விரைந்து வந்து அவள் உயிரைப் பறித்துக்கொண்டு போய் விட்டான். கடமையில் தவறியமையால் முந்திய தூதனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்த ஏழையின் குடிசைக்கருகில் பெரியதொரு மாடமாளிகை. அதில் வசிக்கும் சீமான் சீமாட்டிகளுக்குப் பிள்ளைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில்லை. அவர்கள் அந்த அநாதைப்பிள்ளை களை எடுத்து வளர்த்தார்கள். பிள்ளைகள் தமது தாயுந் தந்தையும் அந்தச் சீமான் சீமாட்டிகளே யென்று நம்பினார்கள் அப் பிள்ளைகளுக்கு வறுமை இன்னதென்று தெரியாது. பெரிய வீட்டுப் பிள்ளைகளல் லவா?

முந்திய தூதன் இரங்கியவாறு பெற்ற தாய் உயிர் வாழ்ந்திருந்தால், பெரிய வீட் டில் வளரும் இரட்டைப் பிள்ளைகளின் கதி என்னும்! பஸ் நிலையங்களில் தாயு டன் சிரட்டை ஏந்துவதா? ஆண்டவன் கருத்தைத் தூதன் அறிவானா?

(v) பாரத யுத்தத்தில் அபிமந்யுவை வதைத் தார்கள். அவன் மரணத்துக்கு எதிரிகளும் கண்ணீர் விட்டார்கள். அருச்சுனன் தன் உயிரை மாய்க்கவும் எண்ணினான்.

அபிமந்யுவை வதைக்கும்போது அதனை அறிந்தும் அறியாதவன்போல் ஒரு வன் அங்கே இருந்தான். மற்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது புலம்பும்போது அழுகை வராமலே அவன் இருந்தான்; அந்த வைராவி யார்? அவன் அந்த அபிமந்யுவின் தாய்மாமன்; கள்ளக் கண்ணன். அபிமந்யுவுக்கு எது நன்மை என்பதை அறிந்தவன் கண்ணன் ஒருவனே. அவன் எப்படி மற்றவர்களோடு கூடிக் கண்ணீர் விடமுடியும்.

(vi) கண்ணன் தருமமூர்த்தி; தருமந் தெரிந்தவன்; தருமம் அவனுக்குச் சிறுபிள்ளை விளையாட்டு;

(a) கண்ணன் பச்சைப் பொய் சொல்லுவான்; சொல்லுவிப்பான்; வள்ளுவர் அவன் பொய்யை அநுவதித்து,

> 'பொய்ம்மையும் வாய்மையிடத்த
> புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்'

என்று புகழ்மாலை சூடுவார்.

(b) கண்ணன் கொல்லுவான்; கொல்லுவிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொலையிற் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.'

என்றார் வள்ளுவர்;

(c) பொய்ம்மையில் வாய்மையுமுண்டு; கொலையிற் கொல்லாமையுமுண்டு, என்றவாறு. இங்ஙனமாகவே வாய்மையில் பொய்ம்மையும் கொல்லாமையிற் கொலையுமுண்டு என்பது பெறப்படும். எனவே, வாய்மையெல்லாம் வாய்மையுமல்ல, கொல்லாமையெல்லாம் கொல்லாமையுமல்ல என்றவாறு.

(d) 'பொய்ம்மையும் வாய்மையிடத்த' என்ற குறளில் வரும் 'புரை தீர்ந்த நன்மை பயக்கு மெனின்' என்ற தொடர் ஆழ்ந்த கருத்துடையது; புரை - குற்றம். புரைதீர்ந்த நன்மை யாவது எவ்வித குற்றமுமற்ற பரிசுத்த நன்மையாம். இவ்வித நன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்தால், பொய்ம்மையும் கொலையும் முறையே வாய்மையும் கொல்லாமையுமாம்]

(vii) புரைதீர்ந்த நன்மை பயத்தல் என்ற விசேடணம், பொய்க்கும் கொலைக்குமே இன்றியமையாதது; வாய்மைக்கும் கொல்லாமைக்கும் இன்றியமையாததன்று. அந்த விசேடணம் அவைக்கு வேண்டுவதில்லை. ஆனால், அந்த வாய்மை கொல்லாமைகள் எந்த உயிருக்கும் எவ்வித தீங்கும் பயவாதிருத்தல் வேண்டும். அவ்வளவே போதுமானது.

(viii) மகாத்மாஜிக்கு இரு கண்கள் சத்தியம், அகிம்சை என்னும் இரண்டுமாம். இவை தீமை பயக்குமாயின், அசத்தியமும் ஹிம்சையுமாய்விடும் என்பது கண்ணனில் வைத்து அறியத்தக்கது. இதனை மகாத்மாஜி ஒத்துக்கொள்ளுவார். தாம் பரிசுத்த சத்தியத்தின் முழுத்தோற்றத்தையும் கண்டு முடிக்கவில்லையென்று பல சந்தர்ப்பங்களில் மகாத்மா கூறியது உண்டு; இக்கூற்று அகிம்சைக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ix) மகாத்மாவின் உபதேசங்களில், இறைவன் கருத்துக்கள் என்று நிச்சயிக்கக்கூடிய உபதேசங்களும், இரக்க மிகுதியினால் நன்மையை நாடி இறைவனை வேண்டுதல் செய்யும் முகமாக இறைவனை நம்பி எழுந்த உபதேசங்களும் உண்டு.

(x) மகாத்மாவின் உபதேசங்களனைத்தும் விலையுயர்ந்த பொற்கட்டிகள். நாள்தோறும் ஒவ்வொரு கட்டியை எடுத்துக்கொண்டு தருமமூர்த்தியான கண்ணனை மனத்தில் இருக்க வைத்து, கர்ம மூலமான தர்மம் என்ற உரைகல்லில் உரைத்துச் சிந்தனை செய்து, நன்மையைக் கடைப்பிடித் தொழுகுவதே மகாத்மாஜிக்குச் செய்யும் கைம்மாறாகும்; அன்றி, நன்றிக்கடனுமாம். இவ்வாற்றால் மனிதத் தெய்வமான மகாத்மாஜியின் ஆசிக்கு நாம் பாத்திரம் ஆவோம் ஆக.

'தர்மே சர்வம் பிரதிஷ்டிதம்', 'தர்மத்திலே தான் எல்லாம் நிலைபெற்றிருக்கின்றன' என்பது உபநிடதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிவநெறிப்புரவலர்', 'சிவதர்மவள்ளல்', 'சிவ தர்மபூபதி' என்றெல்லாம் பாராட்டப்படுபவர் களான கொடைவள்ளல் திரு. க. கனகராஜா அவர்களின் ஆத்மீகதர்ம உணர்ச்சியே காந்தி மகான் நற்சிந்தனை என்னும் முதற்பாகமாகிய இவ்வெளியீடு.

திரு. க. கனகராஜா அவர்களை உயிர்நாடியாகக் கொண்ட மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், ஆன்மார்த்த வெளியீடுகளின் வரிசையில் இதனை வெளியிடுவது பெரிதும் பாராட்டற்பாலது.

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மக்கட் பிறப்பின் குறிக்கோள் மாணடி யடைதலாம். அக்குறிக்கோளினை யடைவதற்கு நெறிகள் பலவாம். காலத்துக்குக் காலம் தோன்றிய அதிமனிதர் இடம், பொருள், ஏவல்களுக்குத் தகச் சிறந்த நெறிகளை வகுத்துச் சென்றுளர். வீடு காதலிப்போர் தத்தமக்குப் பொருத்தமான நெறிகளைக் கைக்கொண்டு வாழ்ந்தீடேறுவார்களாக.

காந்தியடிகள் சகாப்தத்துச் சத்தியம், அகிம்சை என்னும் இரண்டும் மாபெரும் சத்திகளாகி விட்டன. மெய்ம்மையாம் உழவினைச் செய்து, வாய்மையாய் யாவருடனும் பழகி, உண்மையென்னும் உயர்நிலையடைய உலகுக்கு வாழ்ந்து காட்டியவர்களுள் காந்தியடிகளே எங்கள் காலத்து அதிமனிதர். அப்பர் சுவாமிகளின் வாழ்க்கையையும், வள்ளுவப்பெருந்தகையார் வகுத்த வாழ்வாங்கு முறைகளையும் நாங்கள் காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து ஊகிக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இவர்கள் காட்டிய நெறி எம்மை இயல்பாகவே ஈர்த்துளது. இவர்களின் அறிவுரைகளை இவ்வுலகும் அறிந்து இன்ப வாழ்க்கையை நடத்த வேண்டும் என்னும் பேரவாவினாலேயே காந்தி இலக்கியம் முழுவதிலும் கடைந்தெடுத்த வெண்ணெய்க் கட்டிகள் போன்று விளங்கும் சிறந்த சிந்தனைகளை 'A Thought for a Day' என்னும் ஆங்கில நூலிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளோம். வாசிப்பதோடு மட்டும் அமையாது, வாசிப்போர் வாழ்க்கையில் ஏதாவதொன்றினையாவது கைக்கொண்டு சாதிப்பார்களாயின் அவர்கள் வாழ்வு மிளிர்வது முக்காலும் திண்ணமேயாம்.

நாளுக்கொரு சிந்தனையாக ஓராண்டு காலத்துக்குண்டு சேரணிக்கத்தக்க முறையில் இந்நூல் அமைந்துள்ளது. தமிழ் மக்களுள் தெய்வ நம்பிக்கையும், வழிபாடும், பக்தியும், மெய்ஞ்ஞானமும், தத்துவத்தெளிவும் வழிவழிநின்று விளங்கி மன அமைதியும் இன்பமும் எய்தக் காரணமாய் இஃது உதவுவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை அச்சிடுங்கால் ஒப்பு நோக்குதல், அச்சுப்பிரதிகளைத் திருத்துதல் முதலிய பணிகளில் தோன்றாத் துணையாயிருந்து ஈடுபட்ட அனைவர்க்கும் ஈசனருள் பாலிப்பாராக.

இத்தொண்டில் ஈடுபட வைத்து, சிறந்த நூல்களை வெளியிடும் அலுவல்களை ஆற்றவருளிய இறைவனுக்கு எமது வந்தனை வழிபாடுகளை நன்றியறிதலோடு சமர்ப்பித்துக்கொள்கிறோம்

இங்ஙனம்,

சிவநெறிப்புரவலர் க. கனகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சிறுரும் முதியோரும் ஏழைகளும் செல்வரும் ஆகிய எல்லோரும எங்கள் கண்ணுக்கு முன்னே நாளும இறப்பதைப் பார்த்திருந்தும், அமைதியுடனிராது, இன்னுஞ் சில நாட்களுக்கு வாழ்வதற்காக இறைவனைத் தவிர்ந்த எல்லாவற்றினுடைய சிகிச்சையையும் செய்து பார்க்கிறோமென்பதும் ஆச்சரியமே!

1-1-1945.

2. இந்த உண்மையை உணர்ந்தவர்களாய், இறைவனில் மாத்திரம் நம்பிக்கை வைத்து, உற்ற நோயினைச் சகித்துக்கொண்டு பொருந்தியவண்ணம் மகிழ்ச்சியுடன் பூமியில் வாழ்ந்தால் எத்துணைச் சிறப்பாகும்.

2-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மகாதேவ் என்பவரை அவருடைய பூதவுடலிலும், அவர் எழுதிய நூல்கள், கட்டுரைகளிலுங் கண்டுவந்தோம். அவர் உடல் நீத்தபின் இன்று அவருடைய உயிர் எங்கும் வியாபித்துளது. அதனிடஞ் செறிந்த நல்ல பண்புகளைக் கொண்டு அதை உணரக்கூடும்; அப்பண்புகளைப் பகிர்ந்துங் கொள்ளலாம். யாவர்க்கும் சமபங்குளதாகும். ஒருவருக்குக் கூடிய பங்கு, இன்னொருவருக்குக் குறைந்ததென்பதேயில்லை.

3-1-1945.

4. பிறப்பும் இறப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றனவல்லவா? ஒரு பக்கத்தில் இறப்பும், மறுபக்கத்தில் பிறப்புமுளதாகும். இப்படி வரும் பிறப்பிறப்பிற்கு ஏன் துன்புற வேண்டும்? அல்லது ஏன் இன்புற வேண்டும்?

4-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இக்கருத்துச் சரியாயின் — சந்தேகம் யாதுமின்றிச் சரியே — இறப்புக்கு யாம் சற்றும் அஞ்சலாமா, அல்லது துன்புறலாமா, அல்லது பிறப்பில் இன்புறலாமா? ஒவ்வொரு மனிதனும் இக்கேள்வியைத் தான் தன்னையே கேட்க வேண்டும்.

5-1-1945.

6. உலகம் இன்பம் துன்பம், நன்மை தீமை என்றின்னோரன்ன இரட்டைத் தன்மைகளால் நிரம்பியுள்ளது. இன்பத்தின் பின் துன்பமும், துன்பத்தின் பின் இன்பமும் மாறி மாறி வருவன. ஒளி எங்கேயுளதோ, அங்கே இருளும் உளது; பிறப்புளதாயின், இறப்பும் உண்டு. ஒன்றுக்கொன்று மாறுபாடான இவைகளால் தாக்குப்படாது வாழ்வதே பற்றற்ற வாழ்வாகும். இவற்றை யாம் அழித்தல்ல வெல்வது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகட்கப்பால் மேலோங்கிச் சென்று பற்றற்றிருத்தலே வெற்றியாகும்.

6-1-1945.

7. சகல சம்பத்தும் தரும் சத்தியத்தைக் கடைப்பிடித்தலிலே அதாவது சத்தியத்தை வணங்குவதிலே இன்ப வீட்டுக் கதவின் திறவுகோலுளதாகும் என முன் கூறப் பட்டன காட்டுகின்றன. 7-1-1945.

8. அப்படியாயின், சத்தியத்தை எவ்வாறு வணங்கலாம்? யார்தான் சத்தியத்தை அறிபவர்? இங்கே கவனிக்கப்படும் சத்தியம் மனிதனுடைய அறிவுக்கு எட்டிய சத்தியம். இந்த மனித அறிவுக்குட் பட்ட குறுகிய அளவினதாகிய சத்தியத்தைத்தானும் கடைப்பிடிப்பது சுலபமாகாது. உண்மையில் எவ்வளவோ சிரமமானதாகும். 8-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தான் சத்தியமென்று (அதாவது உண்மையென்று) அறிந்துகொண்டிருக்குங் காரியத்தை வெளியிற் பேச ஏன் ஒருவன் தயங்கவேண்டும்? வெட்கமா? யாருக்கு வெட்கப்படுவது? அவர் தம்மிற் பெரியரென்றாலென்ன, அல்லது தம்மிற் சிறியரென்றாலென்ன? உண்மை யாதெனில், நாமெல்லாம் பழக்கத்துக்கு அடிமைப்பட்டவர்களாயிருக்கிறோம். இதனைப் பற்றிச் சிந்தித்து, அக்கெட்ட பழக்கத்திலிருந்து தப்பிக் கொள்வோமாக.

**9-1-1945.**

10. இந்தப் பழக்கத்துக்கு அடிமையாயிருக்கும் வரை சத்தியநெறியைச் செவ்வனே அனுட்டிக்க முடியாது. சத்தியத்தை அடைய எமது என உள்ள எல்லாவற்றையும் அர்ப்பணித்தேயாக வேண்டும். நாம் எம்மைப் பெருப்பித்துக் காட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகிறேம். நாம் தாழ்வானவர்களா யின் எமது தாழ்வைக் காட்டுவது எவ்வளவு நல்லது. உயர்வதற்கு விரும்பினுல் உயர்நெறியிலேயே யாண்டும் சிந்தித்துஞ் செயலாற்றியும வரவேண்டும். அஃது முடியாதபோது யாம் எமது உண்மையான அளவு தோன்றுமாறு வாழ்வோமாக. எப்போதோ ஒரு நாளைக்கு அவ்வுயர் நிலையுந் தாளுகவே வரும். 10-1-1945.

11. மனிதனெவனெருவனும் தன் இன்பத்துக்கும், தன் துன்பத்துக்கும் தானே காரண கர்த்தா. இவ்வுண்மையை என் அனுபவ நிலை வளர வளர, யான் கூடுதலாகக் கூடுதலாக உணர்ந்து வருகிறேன்.

11-1-1945.

12. அஃதவ்வாருயின், ஏன் மனிதன் இன்ப துன்பங்களில் உழல்கிருன்? 12-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. உண்மையென்னவென்றால்: என் மனித னுக்கு இன்பமும் துன்பமும் வருகின்றன என்றதுபோன்ற விடயங்களைச் சிந்திக்க மனிதன் விரும்புகிறானில்லை. அத்தோடு கூட அப்படிச் சிந்திக்கத் தனக்கு நேர மில்லையென்றும் ஓர் எண்ணத்தையும் மன தில் உண்டாக்கிவிடுகிறான்.

13-1-1945.

14. உண்மை நெறியிற் செல்ல விரும்பும் யாமெல்லாம் எங்கள் மனச் சோம்பலுக்கு இடங் கொடுக்காமல் ஆதாரபூர்வமாகிய காரியங்களை நன்கு சிந்திக்க வேண்டும். அவ்வாறாயின், எங்கள் வாழ்வு இனியதும் எளியதுமாகும்.

14-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஒரு ஞானி எங்களை யாத்திரிகர் என்று கூறினார். அவர் கூறியது முற்றிலுஞ் சரியே இங்கே சிலநாட்கள் தங்குவோம். பின்னும் இறப்பதில்லை. வீட்டுக்குத் திரும்புகிறோம். எவ்வளவு அழகும் உண்மையுமுள்ள சிந்தனை!

15-1-1945

16. ஒரு வைரத்தைத்தானுங் கிண்டியெடுப்பதற்கு அரும்பாடுபட்டு, மிகப் பெருங் குவியலான மண்ணுங் கல்லும் வெளியேற்ற வேண்டும். சத்தியமாகிய வைரத்தைத் தேடியெடுப்பதற்கு அதை மறைத்துக் கொண்டிருக்கும் அசத்திய மறைப்பை நீக்கச் சிறிதளவேனும் முயல்கிறோமா?

16-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. முயற்சியின்றி, அதாவது தவமின்றி எதனை யும் பெறமுடியாது அப்படியிருக்கும் போது தவமின்றித் தன்னைச் சுத்தப்படுத் துதல் முடியுமா?

17-1-1945.

18. எங்கள் நேரம் முழுவதும் இறைவனின் சொத்தாயின், ஒரு கணத்தையேனும் யாம் வீணாக்குவது தகுமா? அதேபோல் நாம் கடவுளின் உடைமைகளாயின், எங்கள் சீவியத்தின் ஒரு பகுதியைத்தானும் ஏன் வீண் புலனின்பங்களிற் செலவாக்க வேண் டும்?

18-1-1945.

19. சுயநலமற்ற தொண்டிலிருந்து பெலம் வருகிறது. அத்தொண்டே இறை வணக் கமுமாம்

19-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. அசைசி என்னும் இடத்தில் வசித்த பிரான்சிஸ் என்ற தேவ அடியானின் வணக்கங்களிலொன்றை ஜம்ஷெட்மேதா எழுதியனுப்பினர். அதன் ஒரு பகுதி வருமாறு: "ஓ! தேவநாயகமே! எம்மை அர்ப்பணிப்பதில் யாவும் பெறுகிரும். எமது இறப்பில் ஈறில்லா வாழ்வு வாழும் பிறவியை அடைகிருேம்."

20-1-1945.

21. எவன் நிலத்திற் பாடுபட்டுப் பயிர் செய்கிருனே, அவனுக்கே அந்த நிலம் உண்மையில் உரியது.

21-1-1945.

22. அகத்திற் தூய்மையுடையோன், புறத்தில் அசுத்தமாயிருக்கமாட்டான்.

22-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 நீதியான இலட்சியத்தைக் கொண்ட முயற்சி ஒருபோதுந் தோல்வியடையாது. சத்தியவாக்கின் பயனாய் எவரும் முடிவில் புண்படுவதில்லை.

23-1-1945.

24. தூயவுள்ளத்தாற் கூறிய சொல் என்றும் வீணாகாது.

24-1-1945.

25. சோம்பல் துன்பத்தை விளைக்குமாயின், யாம் சோம்பேறிகளாயிருக்கமாட்டோம். அஃதேபோல் அசுத்தமும் துன்பத்துக் கேதுவாயிருப்பின், யாம் அசுத்தமாயிருக்க மாட்டோம்.

25-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. உழைப்புக்கு முதலிடங் கொடுத்தபின்பே உழைப்புக்குத் தகுந்த சம்பளத்திற்கு இடங் கொடுக்கலாம். இவ்வுணர்ச்சியுடன் ஆற்றும்பணி (சிவதொண்டாகும்) இறை பணியாகும். அன்றி முற்கூலி கேட்பதாயின், சாத்தான் சேவையாகும்.

26-1-1945.

27. ஆசையைப் பூர்த்தி செய்யாது விடுதல் நன்று. ஒருமுறை பூர்த்தியாக்கினல், பின் ஆசையைத் தடுப்பது கடினமாகும், அல்லது முடியாததாகும்.

27-1-1945.

28. தன்னையடக்கியாள முடியாதவன், பிறரை அடக்கியாளுதல் முடியாத காரியமே.

28-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஒருவன் தன்னையறிய வேண்டுமாயின், தனது கூண்டைவிட்டு வெளியே வந்து ஓரவாரமின்றித் தன்னை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

29-1-1945.

30. வேறொருவன் பாரத்தைக் குறைக்கும் எம்மனிதனும் வெறும் வீணனாகான்.

30-1-1945.

31 சரியென்றும் தகுதியென்றும் யாம் கருதும் ஒரு செயலைச் செய்வதிலே எமது இன்பமும் மன அமைதியும் தங்கியுள்ளன. ஏனையோர் சொல்வதை அல்லது செய்வதைப் பின்பற்றுவதால் இவற்றையடைய முடியாது.

31-1-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. சமய நூல்களைக் கற்பதனால் ஒழுக்க வாழ்வைத் தரும் மனவுறுதி வலுவடைதல் உண்மையே. ஆயினும், ஞானமின்றி ஆன்ம விடுதலையடைதல் முடியாது
1-2-1945.

33. மற்றவர்களிடம் உதவி கேட்டுப் போகும்போது தன் சுதந்திரத்தை விற்பதுபோலாகிறது. 2-2-1945.

34. ஒருவருடைய பெருந்தன்மை அவருடைய இருதயத்திலன்றிப் புத்தியாகிய விவேகத்திலல்ல. 3-2-1945.

35. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியுள்ளதே சமய வாழ்வு. எல்லாவகையிலும், எல்லாக் காலத்தும் வாழ்வை ஊடுருவி நிற்பதே சமயம் என்றின்னுமோர் வகையாகவும் கூறலாம். 4-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. வாழ்க்கையின் வேறுபட்ட ஏதோவொன்றல்லச் சமயம். வாழ்க்கையே சமயமெனக் கொள்ள வேண்டும். சமயத்தைப் புறத்தே தள்ளிவிட்ட சமூக வாழ்வு மிருக வாழ்வாகும்.

5-2-1945.

37. மன அடக்கத்தை அதிகமாக உடையவர்களும், வேலையில் முழுக் கவனஞ் செலுத்தி நிற்போரும் மிகக் குறைவாகவே பேசுவர். பேச்சுக் கூடினால், செயல் குன்றும்; செயல் கூடினால், பேச்சுக் குன்றும். இயற்கையைப் பாருங்கள். இடைவிடாது தொழிலாற்றிக் கொண்டும், என்றுவது ஓய்வெடுக்காமலும், என்றும் மௌனமாகவுமல்லவா அது இயங்குகிறது.

6-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. துன்புறும் மக்களுடைய துயர் துடைக்கக் கருதும ஒருவன், தன்னைப் பற்றிச் சிந் திப்பதில்லை உண்மையில் அவனுக்கு இதற்கு எப்படி நேரங் கிடைக்கும்?

7-2-1945.

39. எதையெதை ஒருவன் பார்க்கவுங் கேட்க வும் விரும்புகிருனே, அதை அதையே பார்ப்பான், அதை அதையே கேட்பான். ஒரு தோட்டக்காரன் தன் தோட்டத்தி லுள்ள பூக்களைக் கவனிப்பான். ஒரு தத்துவஞானி அவற்றைக் கவனிக்கமாட் டான். ஒருகால் தான் தோட்டத்துள் ளேயோ அன்றி வெளியிலேயோ நிற் பதையும் கவனியாதிருப்பான்!

8-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. நாங்கள் கூடிவாழ்வோர் வழியால் எங்களி லுள்ள குறைகளை அறியலாம, அன்றி அறிந்து திருந்தவுங்கூடும். தினசரி வாழ் வில் மிகவும் புனிதமாக வாழ வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான தொண்டு ஆற்றலாம்.

9-2-1945.

41. சத்திய விரதத்தைக் கடைப்பிடிப்பதற்கு மௌனம் இன்றியமையாது வேண்டப் படும். எனினும், சத்தியத்தை நாடும் பலர் சதா பேசிக்கொண்டிருக்கிறார்கள். பழக்கம் வலிதாகையாலே இவ்வண்ணம் ஒழுகுகின்றனர் என்பது வெளிப்படை. நாங்களிப்பழக்கத்தைக் கைவிடுவோமாக.

10-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. எம் அன்புக்கு இலக்காய் வாழ்ந்து இறந்தவர்களை எப்படி மறவாதிருக்கலாம்? எவரும் இறப்பதில்லையென்பது எனது உறுதியான நம்பிக்கை. உடலழிவதன்றி உயிரழிவதில்லை. அவர்களின் நற்குணங்களையும் நற்செய்கைகளையும் எங்களாலியன்ற அளவுக்கு யாம் பின்பற்றுவோமாயின், அதுவே அவர்களை என்றும் மறவாதிருத்தற்குச் சாலச் சிறந்த உபாயமாகும். சமாதிகளில் மலர் வளையங்கள் சாத்துவதாலும் இவ்வித பின்பற்றுதலே பலமுற வேண்டும். இன்றேல், வெறுஞ் சமாதிக் கட்டிடத்தை வழிபடலேயாகும்.

11-2-1945.

43. நாமே அசுத்தமாக வாழ்ந்து கொண்டு, மற்றவர்களைச் சுத்தமாக வாழுங்களெனச் சொல்வது எவ்வளவு தவறாகும்!

12-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. ஒரே இன மரங்கட்குள் ஒரேவித குணங்களுண்டு; அக்குணங்கள் அளவிற் கூடியுங் குறைந்துங் காணப்படும். அதுபோல, உலகெங்கணுமுள்ள மனிதரும் ஒரே இனத்தவராயும், அவர்களிடமுள்ள ஒரேவித குணங்களும் அளவில் தேசத்துக்குத் தேசங் குறைந்துங் கூடியும் காணப்படுகின்றனர். அவ்வாருக எவனொரு மனிதனும் இன்னொருவனில் பகைக்கவும், வேறுபடுத்தவும், எரிச்சறபடவும் இடமுண்டோ?

**13-2-1945.**

45. ஒருவன் நல்ல தீர்மானத்தை (அதாவது சங்கற்பத்தை) த்தானும் செய்யாதிருக்கலாம். ஆனல், தீர ஆலோசித்து ஒரு தீர்மானத்தை மேற்கொண்டால், அதனை என்ருவது நெகிழவிடாதிருப்பானுக.

**14-2-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. மனிதன் தன்னைத்தானே ஏமாற்றும் அளவு எவ்வளவு பெரிதென்று பார்க்கும் போது, மற்றவர்களை யேமாற்றும் அளவி லும் மிகமிகப் பெரிதாய்க் காணப்படுகிறது. பகுத்தறிவுள்ள ஒவ்வொருவரும் இதற்குச் சாட்சி கூறுவர்.

15-2-1945.

47. ஒருவன் தன் உற்ருருறவினருடன் கோபம் வருங்கால் அடக்கிக்கொள்ளுதலே சிறப் புடைத்து. ஏனையோருடன் கோபம் வரு மிடத்து இன்றியமையாது அடக்கிக் கொள்ளுதற்குச் சூழலாற் கட்டுப்படுத்தப் படுகிருன். இவ்வண்ணம் அவன் கோபத்தை அடக்குவதால் ஏதுஞ் சிறப் புண்டா?

16-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. உண்டு, குடித்துக் கொண்டாடி மகிழ்வது வாழ்க்கையாகாது. கடவுளைத் துதிப்பதே அதாவது சீவர்கட்குத் தொண்டாற்றலே உண்மையில் வாழ்க்கையாகும். [சீவத் தொண்டே சிவதொண்டு.] 17-2-1945.

49. விலங்கு வாழ்வுக்கும் மனித வாழ்வுக்கும் உள்ள வேறுபாடு யாதெனப் பலவாறு ஆராய்ந்து பார்த்தால், எங்களுக்குள் எழும் பல சிக்கல்கள் தாமே யகன்றுவிடும்.

18-2-1945.

50. ஒருவன் மிதமிஞ்சித் தொழிலாற்றினும், மிதமிஞ்சிச் சிந்தித்தால்தானும், தன் கடமைக்குட்படாததைச் செய்தாலும், அவன் நோய்க்கும் கோபத்துக்கும் ஆளாகிருன். இவ்வித அவசரத்தால் சேதம் நேரும்; தீங்கும் விளையக்கூடும். 19-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. இன்று காலை பாடிய பிரார்த்தனைப் பாடலில், "கடவுள் எம்மை என்றும் மறப்பதில்லை; யாமே கடவுளை மறக்கிறோம்" எனக் கூறப்பட்டது. இது உண்மையில் பரிதாபமான நிலையாகும்.

20-2-1945.

52. தெய்வ சித்தமில்லாதவிடத்துப் பொருளோ, சுற்றமோ மற்றும் நிபுணரான வைத்தியரோ எம்மைக் காப்பாற்ற முடியாது. ஆகவே, யாம் செய்ய வேண்டியது யாது?

21-2-1945.

53. எங்கள் அழுக்குகளை அகற்றி, அகச்சுத்தமடையாதவிடத்து இறைவனை வணங்குதற்கு யாமெவ்வாறு உரிமையுடையோம்?

22-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. ஒருவர் தனது செபத்திற்கு உபயோகிக்கும் செபமாலையானது ஒரு மகானுல் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கலாம், அல்லது துளசியாலேனும், சந்தனக்கட்டையிற் கடைந்த மணிகளாலேனும், உருத்திராக்க மணிகளாலேனும் செய்யப்பட்டிருக்கலாம். ஆனுல், கவனம் மாலையளவில் நின்றுவிட்டால் அந்த மாலையை அவர் எறிந்துவிடுவதே நல்லது. அவர் மாலையை உபயோகிப்பதால் மேலும் மேலும் இறைவனை அணுக வேண்டும்; மாலை அவரைத் தன் கடமையில் ஊக்கமுடையவராக்க வேண்டும். இவ்வாருயின், அவர் அதைத் தினமும் உபயோகித்து வரலாம். 23-2-1945.

55. இறைவன் இருப்பதாலேயே யாம் சீவிக்கிருேம். எனவே, மனிதரேயாயினும் பிராணிகளேயாயினும் எல்லோரும் இறைவனின் கூறுகளேயாகும் 24-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. புதிய ஏற்பாட்டில், "ஒன்றுக்குங் கவலையுருதே; எதற்கு மஞ்சாதே" என்ருரு வாக்கியமுளது. (Phil. 4 : 6) இது கடவுள் நமபிக்கை யுடையார்க்கே சொல்லப் பட்டது.
25-2-1945.

57. அந்த நூலில் (Mathew 6 : 13), கடவுள் எங்களைச் சோதனைக்குட்படுத்துகிருர். பின் அதிலிருந்து விடுவிக்கிறதும் அவரே. தாமாக ஆசை வழிச் செல்லாதாரைப் பொறுத்தமட்டில் இது பொருந்துவதாகும்.
26-2-1945.

58. துளசிதாசராமொருவர் மாத்திரம் இறை நாம மகிமையைப் பாடினுரென்று கூற முடியாது. கிறீஸ்தவ வேத நூலாம் பைபிளிலும் இதே மாதிரியுளது. (Romans 10 — 13)
27-2-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. பாபம் மறைந்திருப்பதில்லை. மனிதனுடைய முகத்தில் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தை முற்று யறியோமெனினும் அது தெளிவாய்த் தெரிகிறது. **28-2-1945.**

60. இந்நாட்களில் பைபிளை வாசித்து வருகிறேன். இன்று பின்வருவனவற்றைக் கண்டேன்: "நீ வணங்கி, நம்பிக்கையுடன் கேட்கின்ற எல்லாவற்றையும் நீ பெறுவாய்." (Mathew 21 : 22) **1-3-1945.**

61. இறைவன் ஆதரவற்றவர்க்கு ஆதரவளிப்பவனுகும். இதே கருத்து Psalms 34:18 இல் வருகிறது: "உடைந்த உள்ளமுடையவர்க்கு அண்மையில் இறைவனுளன்; தம் பாபத்தை நினைந்து உள்ளமுடைபவரைக் காப்பாற்றுகிறுன்." **2-3-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. "நீ பயப்படாதே: உன்னுடன் நான் உளேன்." ( Isaiah 41 : 10 )

3-3-1945.

63. "நீ என்றும் ஆண்டவனை நம்பு. யெகோவா ஆண்டவனிடத்தில் ஒருபோதுங் குன்றாத வல்லபமுளது."

4-3-1945.

64 வெள்ளம் பள்ளத்தை நாடுவது இயல்பு. அதேபோலத் தீமைகளும் மனிதனைக் கீழ் நோக்கி இழுக்கும். ஆகையால் தீய வாழ்க்கையை வாழ்வது இலகுதான். ஒழுக்கம் மனிதனை உயர்த்துவதால் பார்வைக்குக் கஷ்டமாகவே தோற்றும்.

5-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. "என்னுடைய அருளே உனக்குப் போதும்: ஏனெனில், பலவீனத்தில் என்னுடைய பலம் பூரணப்படுத்தப்படுகிறது." (2 Corinthians : 9)
6-3-1945.

66. "கடவுளே எமக்குச் சரணுகதியும் பலமுமாகும். தொல்லைக்குள் உடன் தோன்றும் துணையுமாகும்." (Psalms 46 : 1)
7-3-1945.

67. இறைவன் வாக்கு: "யான் இருக்கிறேன். இருப்பேன். எங்குமுள்ளேன். எல்லாவற்றுள்ளு மிருக்கிறேன்." நாங்கள் கடவுளைக் கவனியாது, இவ்வறிவைப் புறக்கணித்து அநித்தியமான குறைபாடுள்ள ஒன்று எம்மைக் காக்குமென நாடி எம்மைத் துன்பத்துக்கு ஆளாக்குகிருேம். இதைவிட நூதனமானது வேறுமுளதோ?
8-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68 கீழைத் தேசம், மேலைத் தேசமெனவேறு பாடு நாம் கருதப்படாது. ஒவ்வொன்றையும் நடுநின்று, அதனதன் குணத்தைப் பார்த்து அதற்குரிய மதிப்புக் கொடுக்க வேண்டும். இதுவே சிறந்த நீதியாகும்.

**9-3-1945.**

69. நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும் ஆகிய இவைகள் ஏன் உலகிலிருக்கின்றன? கடவுள் இருக்கிறார். ஆனால், அவர் காணப்படுகிறாரில்லை. நீதியும் நீதி கொடுப்பவரும் அவரே. ஆகையால், மனிதன் செயல்களைப் பொறுத்தே மதிக்கப்படுகிறான். நற்செயல்களால் உயர்ச்சியும், துர்ச்செயல்களால் வீழ்ச்சியும் அடைகிறான்.

**10-3-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 ஒரு சமூகத்திலுள்ள ஒவ்வொருவரையும் மேலோங்குவிக்கும் சேவையே உண்மையான சமூக சேவை. ஒரு சமூகத்தை உயர்த்துவதற்காம் சேவையை அறிந்து கொள்வதற்கு அச் சமூகத்தைப்பற்றி முதற் படிக்க வேண்டும். 11-3-1945.

71. மரணம் கிட்டியதும் இறைவனையன்றி ஆதரவளிக்க வேறெவருமில்லை என யாவரும் அறிவர். எனினும், இறைவன் நாமத்தில் நம்பிக்கை வைத்துச் செபிக்கிறதற்கு மனிதனேன் தயங்குகிருன்? என்ன வியப்பு! 12-3-1945.

72 சுதந்திரத்தைப்பெற ஒரேயொரு அகிம்சை வழியுண்டு: சாவதால் சீவிக்கிறேம்; கொல்வதால் ஒருபோதுமில்லை.

13-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. சாவதெப்படி? தற்கொலை புரிந்தா? ஒரு போதுமில்லை. எப்போது சாவது தேவைப் படுகிறதோ, அப்போது சாவதற்கு ஆயத் தமாயிருத்தலே என்றும் வாழ்வதற்குச் சாவதாகும்.

14-3-1945.

74. பொறுமையாலும் சமத்துவ நோக்கினுலும் எய்தமுடியாதது எதுவுமில்லை. நாளாந்தர வாழ்க்கையனுபவத்தால் இவ்வுண்மையைச் சரியென யாரும் அறிந்து கொள்ளலாம்.

15-3-1945.

75. மனீத முயற்சிக்கும் விதிக்கும் இடையில் இடையருப் போர் உளது. யாம் முயற் சிப்போம். பயனை இறைவன் கையில் விட்டுவிடுவோம்.

16-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. எல்லாவற்றையும் விதியின்படி நடக்கும் என்று விடவுங் கூடாது; விதி தன் நியதியிற் செல்லும். எமது ஊக்கத்துக்கும் மதிப்புக் கொடாது விடவுங்கூடாது. எங்கே யாம் தலையிடலாமென்பதைத்தான் யாம் பார்க்க வேண்டும். அது எங்கடன்; பலாபல னெப்படியாயினு மிருக்கலாம்.

**17-3-1945.**

77. பரிதாபகரமான செய்தி யென்னவென்ருல், நாம் இது எமக்கமைந்த கடமையென்பதை அறிந்திருந்தும் அதைச் செய்யத் தவறுகிறோம்! இது ஏன் இப்படியென்பதற்காம் மறுமொழியை ஒவ்வொரு மனிதனுமே தனக்குத் தனக்குச் சொல்லிக் கொள்வாஞக.

**18-3-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. மௌனமே ஆகச் சிறந்த பேச்சு — இதை எனது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமுமே உணருகிறேன். பேசத் தேவைப்படின், எவ்வளவு சுருக்கமாகப் பேசலாமோ அவ்வளவு சுருக்கமாகப் பேசு. ஒரு சொல்லே போதுமாயிருந்தால், இரு சொற்களைப் பேசாதே. 19-3-1945.

79. அற்ப காரியங்களே எம்மைப் பொறுமை இழக்கச் செய்யும் போதெல்லாம், எங்கோ மனத்துள் ஒரு பகுதியில் பற்று மறைவாயிருக்கிறதென விளங்கிக்கொள்வோமாக. அதைக் கண்டுபிடித்து, அது திரும்பி வர இடமில்லாவண்ணம் துரத்திவிடவேண்டும். நாம் பெரிய காரியங்களில் நிறுதிட்ட முடையோமென்பது ஒரு மயக்கே; ஏனெனில், புறக்கட்டுப்பாடுகள் அப்படியான நிறுதிட்டத்தை யுண்டாக்குகின்றன. அந்த நிறுதிட்டம் உண்மையில் நிறுதிட்டமல்ல. 20-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. இப்படியான காலங்களில் பின்வரும் பாடற் பொருளைச் சிந்தனை செய்: "புலன்களுக்கும் வெளிப் பொருட்களுக்கும் தொடர்பு வந்து போய்க்கொண்டிருக்கும். நீ சாட்சியாயிரு."

21-3-1945.

81. எதை ஒருவன் செய்கிறானோ, அதை அவன் திருத்தமாகச் சிரத்தையுடன் செய்வானாக. இன்றேல், அவன் அதை அறவே செய்யாது விடவேண்டும். இக்கொள்கையை நான் என்றுங் கடைப்பிடித்து வருகிறேன். ஆனால், இன்று இக்கொள்கை எனக்கு மிக உறுதிப்பட்டது. இன்று கஸ்தூரி பாயின் சிரார்த்த தினம். ஆகையால், வழக்கம்போல் கீதை ஓதல் நடந்தது. ஆனால், அது உயிரற்றதாயிருந்தது.

22-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. ஒரு பிழை, அதைச் சரி செய்யும்வரை அது பிழையாகவே இருக்கும். அதை மறைத்து மூடினுல், அது ஒரு பகந்திரம் போல் குமிட்டி வெடிக்கும். 23-3-1945.

83. தன் உண்மைத் தன்மையை உணர்வதும், அதனைத் தியானிப்பதும், அதன் நற் குணங்களின் வழி ஒழுகுதலும் ஆகிய மூன்று வழிகளால் மனிதன் மேலோங்கு கிருன். இதற்கு மாருன வழிகளிற் சென் ருல் வீழ்ச்சியடைவான். 24-3-1945.

84. பொறுமையாவது யாது? பின்வருமாறு சங்கராச்சாரியார் கூறினுர்: "கடற்கரையி லிரு ஒரு புல் இதழைக்கொண்டு அதன் நீரை ஒவ்வொரு துளியாய் எடு. துளி களை விட்டு வைப்பதற்கு ஒரு கொள்ளிட முண்டேயாஞல், உன்னிடமும் போதிய பொறுமையும் உண்டேயாஞல் சமுத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முமே முற்ருய் வற்றிவிடும்." இவ்வித பொறுமை பூரண பொறுமைக்குக் கிட்டிய பொறுமையாகும். 25-3-1945.

85. அளவுக்கடங்காப் பொறுமையைத் தன் மாட்டுக் குணமாயமையாத ஒருவன் அகிம்சையைச் சாதிக்க முடியாது.

26-3-1945.

86. ஒரு பாம்புக்கும் ஒரு மனிதனுக்குமிடையே யாது வித்தியாசமிருக்கிறது? தோற்றமளவில் பாம்பு வயிற்ருல் நகருகிறது; மனிதன் கால்களால் நிமிர்ந்து நடக்கிருன். எனினும், உண்மை ஒருவகையாயிருக்கத் தோற்றம் இன்னெருவகையினது. மனத்தைப் பொறுத்தமட்டில் வயிற்ருல் நகரும் மனிதனைப்பற்றி யாது கூறலாம்?

27-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. நாளுக்குநாள் மௌனம் எவ்வளவு முக்கிய மானதென்பதைக் காண்கிறேன். அது எல்லாருக்கும் நல்லதே. எனினும், வேலை யில் முற்றும் ஈடுபட்டிருக்கு மொருவனுக்கு அது பொன் போன்றது.
28-3-1945.

88. "அவசரப்படுபவர் திகைத்துக் கலங்குவர். ஆறி அவதானமாய்க் காரியங்களைச் செய் வோர் அமைதியாயிருப்பர்." இதனுண் மையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கண மும் காண்பர்.
29-3-1945.

89. வேலைக்கிரமம் தவறுவது எவ்வளவு அபாயகரமானது! பம்பாய்க்கு வந்தபின் (தினமொரு நற்சிந்தனையெழுதும்) கிரமந் தவறிவிட்டேன். (நாலு நாட்களிலெழுத வேண்டியனவற்றை ஒரு நாளில் எழுதி ஞர்கள்.)
30-3-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. எக்கருமமும் அதற்கான பிரமாணத்துக்கு அமையாவிட்டால் தொழிற்படாது. சூரிய மண்டலத்தையும் அதனுடன் சுற்றித் திரியுங் கிரகங்களையும் பார். அவை இயங்கி வரும் பிரமாணங்களில் ஒரு கணத்திற்கேனும் தவறு நிகழ்ந்தால், அவைகளெல்லாம் துகளாய்ப் போகும்.

31-3-1945.

91. பெரிய சூரிய மண்டலத்தைப் பற்றிய இந்தப் பாடம் மனிதரைப் பொறுத்தமட்டிலும் அமைகிறது. நாம் இதைப் படித்து அதற்கேற்க நடந்துகொள்ள வேண்டும். இன்றேல், நாம் உயிரிருந்தும் செத்தவர்போல் வாழவரும்.

1-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. எமது தேவையை அவசியமில்லாது பெருக்கிக் கொண்டு போவது பாபமாகும்.

2-4-1945.

93. இன்று தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்காகப் பொதுசன வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கிறோம். இன்றைக்காக வகுத்த நேர அட்டவணையை விளக்கத்துடன் ஒப்பேற்றுவோமானால், அகிம்சா மார்க்கத்தில் பெரிதும் முன்னேறி விடுவோம்.

3-4-1945.

94. மனிதன் தனக்கமைந்த கடமை எதுவென அறிவான். எனினும், தான் செய்ய வேண்டுமென அறிந்ததைச் செய்கிறானில்லை. அது ஏன் அப்படி?

4-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. எம்மைச் சூழவுள்ள மனிதரின் மனவெள்ளத்துடன் அள்ளுப்படுவோமாயின், எமக்கு முழுக்கேடு விளையும். சிமூர் மறியலாளிகளைப் பற்றிய நிலைமை நாளுக்கு நாள் மாறி வருகிறது. எங்கள் கடமைகளை ஆற்றிக்கொண்டு பற்றின்றி நிற்போமாக.

5-4-1945.

96. ஒரு மிக எளிதான காரியத்திற்றனும் தான் கொண்ட அபிப்பிராய பேதத்தில் விடாப்பிடியாய்த் தொடர்ந்து நிற்கும் ஒருவனுடன் பொறுமையுடன் நடந்துகொள்வதற்கு ஒருவருக்கு வேண்டிய அகிம்சை எவ்வளவு பெருமளவிற்று! 6-4-1945.

97. என்னுடைய சரீரத்தை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு எவ்வளவோ பாடுபடுகிறேன். ஆன்மாவை அறிவதற்கு அதே மாதிரிப் பாடுபடுகிறேனா? 7-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. கருத்துவேற்றுமை வரும்போது என்னி டம் கோபம், அழுகை, சிரிப்பு, இரக்கம் என்றிவைகள் மாறிமாறி வருகின்றன. இவைகளை விடுத்து, அமைதியுடனிருந்து கருத்துவேற்றுமையை மாற்ற முயல்வதல் லவா எனது கடன்?

8-4-1945.

99. எங்களைப் புகழ்கிருர்கள். எங்களிற் குற் றங் கூறுகிருர்கள். இவற்றில் எதை நாம் நம்பவேண்டும்? இரண்டும் தகாதனவா யிருக்கலாம். அப்போது நாங்களே எங் களை மதிப்பிடும் நீதிபதிகளாவர். அவ்வா ருயினும் பிழையாய் மதித்தற்கு எவ் வளவோ இடமிருக்கிறது. நாங்க ளெப் படிப்பட்டவ ரென்பதைக் கடவுளொருவரே அறிவார். ஆனலவர் எங்கட்குச் சொல்வ தில்லை. ஆகவே, எங்களைப் பற்றி அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுவதாவது, எங்களைப் பற்றிய எதையும் நம்புவதாவது இல்லாதிருப்பதே சிறந்தது. நாம் எப்படிப்பட்டவரோ அப்படிப்பட்டவரே ஆவோம். நாம் எப்படிப்பட்டவரென்று அறிதலாலாவது, நம்புவதாலாவது ஓர் இலாபமுங் கிடையாது. கடமையை ஆற்றுவதாகிய ஒன்றே உண்மையிற் காரியமானது.

9-4-1945.

100. கண்களை இழந்தவனல்லக் குருடன். எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிருனோ, அவனே குருடன்.

10-4-1945.

101. ஒரு மனிதனுடைய மனமாட்சியை மனிதர் சஞ்சரிக்கும உலகிற் பரிசோதிக்கலாமன்றிச் சஞ்சாரமில்லாத இமயமலைச் சிகரங்களிலல்ல.

11-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102. வாழ்க்கைக்கு ஓர் இலட்சியத்தை வைத்துக் கொள்வது ஒரு காரியம். இலட்சியத்தின்படி வாழ்வது இன்னொரு காரியம்.
12-4-1945.

103. ஓர் இலட்சியத்தைக் கடைப்பிடியாது வாழ்பவன், சுக்கானில்லாத கப்பலுக்கு நிகராவான். 13-4-1945.

104. இலட்சியத்தை அடைவதற்கு விடா முயற்சி செய்தால் மாத்திரம் நாம் இலட்சியமுடையோ மெனலாம். 14-4-1945.

105. சரியான முயற்சியையும், எங்களாலியன்ற முழு முயற்சியையும் செய்வோமாயினன்றி நாம் திருப்திப்படக்கூடாது முயற்சியில் மாத்திரம் பயன் தங்கியிருக்கவில்லை. எங்கள் கட்டுப்பாட்டுக்கமையாத பல காரணங்களும் எதிரிடும். 15-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. சரியான முயற்சியென்று எதைக் கூற லாம்? சரியான முயற்சியால் கருதியது பெரும்பாலுங் கைகூடுகிறது. கருதிய பயன் பெறுவதால் சரியென்ற தீர்ப்பும் உண்டாகிறது ஆனல், அனுபவத்தில் எப்பொழுதும் இவ்வாறு அமைவதில்லை சரியான முயற்சி எதுவாயின், இலட்சி யத்தை அடைவதற்காம் வழிவகைகளில் ஆழமான அறிவுடன் முயற்சிக்கும் முயற் சியே. எதிரிடையான பயனையே பெறுவ தாயிருந்தாலும், வழிவகைகளும் மாருதன வாயும், முயற்சியும் குன்ருது நிகழ்வதாயு மிருக்க வேண்டும் 16-4-1945

107. "எங்களாலியன்ற முழு முயற்சி" யென்று எதைக் கூறலாம்? சலிப்பின்றித் தன்ன லியன்ற முழு வல்லபத்தையும் செலவு செய்து முயலுமஃதே. இப்படியான தூய முயற்சியாற் பெரும்பாலும் வெற்றியே வரும். 17-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108. ஒரு கருமத்தைப் பற்றிய அற்ப அறிவைக் கொண்டே மனிதன் அதை ஆற்றுவதற்கான தீர்மானத்தை மேற்கொள்கிருன் பின் தனது செயல்களையும் அப்படியே வழிப்படுத்துகிருன். இப்படியான வேளைகளிற் கூடியவரையில் தீர்மானமில்லாது விடுதலும், பயனைப் பற்றியும் கவனியாதிருத்தலும் நன்று. ஆனுல், தீர்மானஞ் செய்வது தனது கடமையாயமையுமாயின், எவ்வளவு கவனஞ் செலுத்த முடியுமோ அவ்வளவு கவனஞ் செலுத்தித் தீர்மானத்துக்கு வர வேண்டும். தீர்மானத்தையும் பயமின்றிச் செயற்படுத்த வேண்டும். 18-4-1945.

109. பொருத்தமில்லாதபடிக்கு வரும்போது முக்கியமான ஒரு காரியமும் தன் முக்கியத்துவத்தை இழந்துவிடும். அற்பமான காரியமும் அது பொருந்துமிடத்தில் மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் முக்கியத்துவத்தை அடைந்து விடும். 19-4-1945.

110. மனிதனது அவா அளவு கடந்து செல்கிறது. அது பெருகி வானமுகட்டுக்குஞ் செல்லும்; சமுத்திரத்தின் ஆழத்திற்குஞ் செல்லும். ஆகையால் அதை அடக்க வேண்டும். 20-4-1945.

111. மனிதன் தான் பெறுவேனென்று நம்பியிருந்த அளவிற்கு மேலாக ஏதுமொன்றைப் பெறும்போது அவன் அளவு கடந்த மகிழ்சியை அடைகிருன்.
21-4-1945.

112. ஆத்மீகசம்பத்தில் மேம்பட்டவரென எண்ணப்படும் ஒருவர் நோயால் எப்போதும் வருந்துகிருரென்ருல், அவரிடம் ஏதோ பிழையிருக்கின்றதென்பதில் ஐயமில்லை.
22-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113. எங்கள் முன், செய்யவேண்டியதாய் இருக்கும் வேலை மிகப் பெரியதெனை மனத்திற் கவலைகொள்வோமாயின், நாம் பயத்தாற் குழம்பி யாதும் செய்ய முடியாது. ஆனால், மன நிம்மதியுடன் வேலையிற் கையை வைப்போமானால், மலைபோற் பெரிய வேலையும் நாளுக்குநாள் குறைந்து ஒழிந்துவிடும்.

23-4-1945.

114. எங்களுக்கு எங்கள் பிழைகளைக் காண விருப்பமில்லை. ஆனால், மற்றவர்களிற் பிழை காண்பதில் மகிழ்கிறோம். இப் பழக்கத்தால் அதிகம் துன்பம் உண்டாகிறது.

24-4-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. ஒருவன் தான் சத்தியாக்கிரகி எனக் காண்பித்துக் கொள்வதால் அவன் சத்தியாக்கிரகியாகான். தூய்மையான சத்தியத்தைச் சாதிப்பதாலேதான் அவன் சத்தியாக்கிரகியாவான்.

25-4-1945.

116. கண்ணுக்கு அசுத்தமாய்த் தோன்றுவது தானே அசுத்தம்? வெள்ளையான பொருளின் மேல் ஒரு சிறிது அழுக்குப் பட்டாலும் எமக்குச் சினமுண்டாகிறது. ஆனல், கறுத்த ஒரு பொருளின் மேல் எவ்வளவு அழுக்கு இருந்தாலும் அதைப் பற்றி யாம் சிறிதுங் கவலைப்படோம்.

26-4-1945.

117. கறுப்பான பொருட்களை அசுத்தமானவை யென்றும், வெள்ளையானவற்றைச் சுத்தமானவையென்றும் எண்ணுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையாயமைந்த இடத்தில் வெள்ளை யைப் போல் கறுப்பும் நல்லதே. இடம் தவறினுல் எதுவும் தீதாய்விடும்.

27-4-1945.

118 நான் சாவுக்குப் பயப்படேனென்று சொல்லி வந்த ஒருவர், அதற்கு மிகவும பயந்து அதைத் தடுப்பதற்கு எல்லா வழிகளையும் நாடுவது எவ்வளவு ஆச்சரிய மாயிருக்கிறது.

28-4-1945.

119. மகனெருவன் பெற்றோருக்குக் கீழ்ப்படி வது ஒரு வணக்கமாகுமென்பதிற் சந் தேகமில்லை. என்றென்றைக்கும் எமக்குத் தந்தையாயிருக்கும் இறைவனுக்கு எவ் வண்ணம் வணக்கஞ் செலுத்துவோம்? வணக்கத்தைக் குறுகிய கருத்தில் கொள்ள வேண்டியதில்லை.

29-41945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120. " இன்றைக்கு ஒரு சிந்தனை " என இந்திய 'ரைம்ஸ்' பத்திரிகையில் இன்று வந்த சிந்தனை எனது மனதைக் கவர்ந்தது. அதன் கருத்து வருமாறு: "சத்தியத்தை நம்பி வாழ்; சத்தியத்தைத் தியானி; சத்தியமாய் வாழ். அசத்தியம் எவ்வளவு வெற்றியடைவதுபோல் தோன்றினாலும், அது ஒருபோதும் சத்தியத்தை வெல்ல முடியாது."

30-4-1945.

121. தீமைகளுடன் சில நன்மைகளுங் காணப்படும் கபடமுள்ள இடத்திற்கு நன்மைகளை மாத்திரம் பொறுக்கிக்கொள்கிறதற்கென்றேனும் போகாதே. நீ போவாயாயின், நீ கொடுப்பதே தகாததான ஒத்துழைப்பு ஆகிவிடும்.

1-5-1945.



4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. எவ்வாறு நாம் பாலில் நஞ்சு கலந்திருந்தாலதை ஊற்றிவிடுகிறோமோ, அதே போல் கபடங்கலந்திருக்கும் நன்மை எதையும் தவிர்க்க வேண்டும்.

2-5-1945.

123. கொன்பியூசியஸ் என்னும் சீன ஞானி கூறுகிறார்: "ஒழுங்குபட்ட ஆட்சி நிலவும் ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அங்கேயுள்ள பொருட் செல்வத்தைக் கொண்டல்ல அளப்பது. நாட்டின் மக்களினதும் அவர்களின் தலைவர்களினதும் தூய்மையே நாட்டின் உண்மையான செல்வமாகும்."

3-5-1945.

124. மனங்கள் இரண்டு வகையின. ஒன்று மனிதனை மேலோங்கச் செய்வது, மற்றது அவனைக் கீழே தாழச் செய்வது. இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவிடாது எண்ணிப்பார்த்து, ஒன்றை மற்றென்றிலிருந்து பிரித்தறியப் பழகுவோமாக. 4-5-1945.

125. எவ்வாறு ஒரு மனிதன் தன்னால் கண்டு கொள்ள முடியாத தன் முதுகைப் பிறர் காண்பரோ, அதேபோல் எங்களால் எங்களுடைய பிழைகளைக் காணமுடியாது. 5-5-1945.

126. எவரொருவருடைய சாவும் அவருக்கு வருத்தம் துன்பங்களிலிருந்து விடுதலையைக் கொடுக்கவில்லையா? அப்படியானால், ஏன் சாவரும்போது அழவேண்டும். 6-5-1945.

127. சீவியம் ஒரு ரோசாவுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஏனெனில், சீவியமும் முள் நிறைந்ததாயிருக்கிறது. 7-5-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128. மனிதனிடம் ஒரேயொரு பயந்தானிருக்க வேண்டும் — "இழிவான அல்லது அசத்தியமான ஒன்றைச் செய்துவிடுவேனே" என்ற பயமே அது.

8-5-1945.

129. வேகாத பாணும், திருத்தமின்றிச் செய்யப்பட்ட வேலையும் ஒத்தனவே. இரண்டையும் எறிந்து விடுவதே தகும்.

9-5-1945.

130. சத்தியமே பேசி, சத்தியத்தோடு பொருந்த வாழ்வதற்கு மனிதன் பயப்படுவதும், அசத்தியத்திற்கெனின் அவ்வாறின்மையும் ஏன்?

10-5-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131. "கோழைகள் தாம் இறப்பதற்குமுன் பல தடவைகளில் இறந்துவிடுகின்றனர்" என ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகிறது. யான் பல முறைகளில் சொல்லி வந்தேன்: சாவென்பது ஒருவரை வருத்தும் துன்பங்களிலிருந்து உண்மையில் விடுவிக்கிறது. பயம் அவனை அதிகம் வருந்தச் செய்து, ஏனையோர் அவனைப்பற்றி இரங்கும்படி செய்கிறது.

**11-5-1945.**

132. கடவுளை எப்பெயர் கொண்டழைத்தாலும், அவரிடம் கடவுளின் குணங்கள் இருக்கும்போது யாம் அவரை உண்மையில் வணங்க வேண்டும்.

**12-5-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

133. அவ்வாருயின், அவர் எப்படிப்பட்டவரா யிருக்க வேண்டும்? விருப்பு வெறுப்பு இல்லாதவராயும், உருவமில்லாதவராயும், எல்லா நற்குணங்களுமுடையவராயும், தீமைகளினின்றும் முற்ருய் நீங்கினவரா யும் இருக்க வேண்டும். அப்படியாயின், அவருக்கு ஏன் ஆண்பாலைக் கற்பிக்கி ரேம். இலக்கணத்துக்கு இப்படிக் கொள் வது. எங்களுடைய கடவுட் கொள்கைப் படி கடவுளுக்கு உருவமுமில்லை; அவர் ஆணுமல்லப் பெண்ணுமல்ல.

13-5-1945.

134. ஒரு பிரமாணத்தை மீறுவது ஏனைப் பிர மாணங்களையும் மீறச் செய்வதற்கு இன் னும் வழிகோலுமென்பதற்கு ஐயமில்லை.

14-5-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

135. இன்பத்தில் மகிழும்போது துன்பத்தை வரவழைக்கிறோம். வருத்தம் துன்பங்களின் பயனாக உண்மையான இன்பம் உதயமாகிறது.

**15-5-1945.**

136. வலிந்து உண்டாக்கிக் கொள்ளாததும், இயல்பாயெழுவதுமான உண்மையான சிரிப்பு நல்லுணர்ச்சியைப் பெரிதுந் தெரிவிக்கிறது. பேச்சிலுள்ள வல்லபத்திலும் கூடிய வல்லபம் அதற்கு உண்டு.

**16-5-1945.**

137. ஒழுங்குபட்ட சீவியத்தால் மனிதன் திருப்தியுடையவனாகிறான். இந்த மனத் திருப்தி அவனுக்குத் தேக ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையுங் கொடுக்கிறது.

**17-5-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

138. பெருமிதம் ஒரு மனிதனை முற்றாய் விழுங்கிவிடும். இதனுண்மையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணமும் உணர்ந்து கொள்ளலாம்.

18-5-1945.

139. இன்னொரு புறத்தில் நாணமும் தாழ்மையும் அவனை வளர்த்து, உயர்வை அவனுக்குக் கொடுக்கிறது.

19-5-1945.

140. வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீட்டு உபயோகிப்பதற்கு எடுக்க முடியாது. எனினும், இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறோம்!

20-5-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

141. தேவையற்ற ஒரு சொல்லைப் பேசினு லும் சத்தியம் தவறுகிறோம் ஆகையாற் றான் மௌனங் கடைப்பிடிப்பதால் சத்தி யத்தைச் சாதிப்பது இலகுவாகிறது

21-5-1945.

142. ஓர் இலட்சியத்தை மேற்கொண்டு செய் யப்படாத தொழிலானது துறைநோக்கிச் செல்லாத அல்லது திசைப்படுத்தப்படாத கப்பல்போல் பயன் கொடுப்பதில்லை.

22-5-1945.

143. ஒரு சக்தி புகையிரத வண்டியை ஓடச் செய்கிறது; ஆகாயவிமானத்தைப் பறக் கச் செய்கிறது; மனிதனைச் சீவிக்கச் செய் கிறது. இதை வேறு வேறு பேர் கொண்டழைத்தாலும் இச்சக்தி தெய்வ சக்தியே. புகையிரத வண்டியை நீராவி யந்திரம் ஓடச்செய்கிறதில்லை; ஆகாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானத்தை மோட்டார் யந்திரம் ஓடச் செய்வதில்லை; மனிதனை இருதயத்தின் இயக்கம் சீவிக்கச் செய்வதில்லை.

23-5-1945.

144. "சமநோக்கு இனிமையைத் தருகிறது"—இதன் உண்மையை ஒவ்வொரு கணமும் அனுபவத்திற் காணுகிறோம்.

24-5-1945.

145. முரட்டுப் பிடிக்கும், உறுதிப்பாட்டுக்குமிடையிலுள்ள வித்தியாசம் மிகப் பெரிது. தனது கொள்கைகளை மற்றையோர்களிடம் திணிக்க நாடுவது முரட்டுப்பிடியாகும்; ஆனால், உறுதிப்பாட்டால் நாம் எங்களுக்கே சில கட்டுப்பாடுகளை அமைத்துக் கொள்கிறோம். இதன் பயனாக ஏனையோர் தாமாகவே எங்கள் கொள்கைகளை யேற்றுக் கொள்கிறார்கள். 25-5-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. ஒரு மனிதன் தான் செய்து முடிக்க வேண்டிய வேலை அதிகமாகவும், அதற்கான காலம் சிறிதாகவுமிருந்தால் அவன் செய்ய வேண்டியது யாது? அவன் பொறுமையுடன் ஆலோசித்து முக்கியமான பயன்தரும் பகுதியைச் செய்து முடிக்க வேண்டும்; மிகுதியைக் கடவுளுடைய கையில் விட்டுவிடலாம். கடவுள் அவனை உயிருடனிருக்கவிட்டால், இன்னொருநாளிலதையும் அவன் செய்து முடிக்கலாம். 26-5-1945.

147. முகத்தைச் சுத்திசெய்வதற்கென எனது மூக்குக் கண்ணாடியைக் கழற்றி வைத்தேன். பின்பு எடுக்க என எண்ணினேன். ஆனால் அவ்விதம் எடுக்க மறந்து விட்டேன். ஏன்? பின்பு வேறேதோ எனது மனதைக் கவர்ந்து விட்டதால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனவீனமாகி விட்டேன். இது ஓர் ஆபத்தை விளைக்கக்கூடிய ஓர் ஒழுங்கீனம்.
27-5-1945.

148. ஒருவன் ஒரு பிழையைச் செய்யும்போது பிறர் கண்டு விடுவாரோவென வெட்கப் படுகிருன். ஆனால், ஒரு நன்மையான காரியத்தைச் செய்யும்போது அதைப் பிறருமறிய வேண்டுமென விரும்புகிருன். ஏன்?
28-5-1945.

149. பொருமை தனக்கு ஒதுக்கிடங்கொடுக்கு மொருவனைத் தின்று விடுகிறது. எவனில் அவன் பொருமை கொள்கிருனோ, அவன் அதாற் பாதிக்கப்படுவதில்லை; சிலவேளை அவனுக்கு அதைப்பற்றித் தெரியாமலேயிருக்கும்.
29-5-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150. பொருமைக்கு எதிர் தயாளம். தயாள சிந்தை எங்களைப் பிறரில் பொருமை கொள்ளவிடாது. ஆனல், இன்னொருவரிடத்து நன்மையைக் காணும்போது அதை நாம் நயப்போம், அதனல் இலாபமடைந்துங் கொள்வோம்.

**30-5-1945.**

151 மனிதன் தன்னைத்தானே எவ்வண்ணம் ஏமாற்றிக் கொள்கிருனென்பதை ஒவ்வொரு கணமும் நான் அவதானித்து வருகிறேன்.

**31-5-1945.**

152. எல்லாருக்குந் திருப்தி கொடுப்பதற்கென நடந்துகொள்பவன் ஒருவருக்குந் திருப்தி கொடான்.

**1-6-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153. கடவுள் திருப்திப்படுவதற்குத்தான் நாம் நடக்க வேண்டும். போற்றுவதாயின் அவரையே போற்ற வேண்டும். அப்படி நடந்தால், எல்லாக் கவலைகளும் அலைச்சல்களும் எம்மைவிட்டு நீங்கும்.

2-6-1945.

154. கடவுளைத் திருப்திப்படுத்துவதெங்ஙனம்? எங்ஙனம் அவரைப் போற்றுவது? அவர் படைத்துவிட்டவனுக்கு—மனிதனுக்கு— பணிபுரிவதால். 3-6-1945.

155. பழக்கவசத்தால் ஒரு மனிதனிடம் தன்னை மறந்து பேசிக்கொண்டிருக்கிற தன்மை வந்துவிட்டால், வாயைச் சேலையாற் கட்டிக்கொண்டாவது அல்லது உதடுகளை ஒட்டிகொண்டாவது அப்பழக்கத்தை மாற்றிவிடுவது அத்தியாவசியமானது. 4-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156. விருப்பம், நல்லது, கெட்டது, எய்தற் பாலது என்றின்னோரன்னவாய்ப் பல வகைப்படும். இவற்றில் நல்லதும் எய் தற்பாலதுமான விருப்பத்துக்கு மாத்திரம் மனத்தில் இடங் கொடுக்க வேண்டும். (ஏனைய விருப்பங்களை, எழும்போதே அகற்றிவிட வேண்டும்.)

5-6-1945.

157. சமய சாஸ்திரங்களுக்கு எத்தனையோ பேர் எத்தனையோ கருத்துக்களை யுரைக் கின்றனர். ஒரு விளக்கத்தைத் தெரிந் தெடுப்பதற்கு நேரான வழியேதென்றால் கூறுதும்: "அந்த விளக்கம் உண்மையை அடிப்படை யுண்மையோடு முற்றாய்ப் பொருந்துமாறு உரைப்பதாய் யாம் உணர வேண்டும்; நல்லொழுக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடு முரண்படாததாயு மிருக்க வேண்டும்; புலனடக்கத்தைத் தருவதாயுமிருக்க வேண்டும். நாங்கள் ஏற்கும் விளக்கம் இலக்கணத்துடன் பார்க்கும்போது முரண்படுமென்ருலுங் காரியமில்லை."

6-6-1945.

158. நேர்மையற்ற ஒருவன் தான் தப்புவதற்குப் பல தந்திர வாயில்களைச் சமைத்துக் கொள்வான். ஒன்றின் வழியாலோ இன்னென்றின் வழியாலோ ஒருமுறை பிடிபடாது தப்பினுனென்ருல் தான் சமர்த்தனென எண்ணுகிருன். இப்படித் தப்பும் போது உண்மையில் அவன் தான் விழுந்து அகப்படுவதற்கான குழியொன்றைச் சமைத்தவனேயாவான்.

7-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

159. நேர்மையான ஒருவன் தான் தவறும்படி செலுத்தக்கூடிய வழிகளையெல்லாம் அடைத்துவிடுகிருன். அவனுக்குள்ளது நேர்வழியொன்றே. அவன் விழுவதற்கு வழியில் ஒரு குழியும் உண்டாகமாட்டாது.

8-6-1945.

160. பற்றின்றி வாழ்வது மிகக் கஷ்டமானது என்று சிலர் சொல்லிக்கொள்கிருர்கள். அது அப்படித்தான். ஆனல், எமக்குத் தேவையாயுள்ள எவற்றைக் கஷ்டமின்றிப் பெறுகிரேம்? யாம் நன்கு தீர்மானித்தும விடாது தொடர்ந்து ஊக்கப்பட்டாலுமே கடினமாயிருக்கும் எக்காரியமும் இலகுவாகிறது.

9-6-1945.



5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161. துளிகள் பல சேர்ந்ததே சமுத்திரம். இதற்குக் காரணம் யாதெனில், துளிக ளொன்ருதலும் முழுவதாக ஒத்துழைத் தலுமுடையன. மனிதரைப் பொறுத்த அளவிலும் இவ்வித தன்மைகள் உள் ளன.

10-6-1945.

162. அறியாமையை மறைப்பதால் அது அதி கரிக்கிறது. நேர்மையாய் உள்ளத்திலுள் ளதைக் கூறிவிட்டால், அவ்வறியாமை குறையுமென நம்புவதற்கு இடமிருக் கிறது.

11-6-1945.

163. ஒரு கிளி இறை நாமத்தைச் சொல்வதா லடையும் பயன் எவ்வளவு சிறிதோ அவ்வளவு சிறிதே விளக்கமில்லா மன னப் பாடத்தால் மனிதனடையும் பயனும்.

12-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. மேற்கூறப்பட்டது சரியானதும் அனுபவத்துக்கு ஒத்ததுமேயானுல், அறிவானது ஆழமாக உள்ளத்தில் பதிந்து, மனிதனது இயல்பின் ஒருகூருய் விட்டாலே ஒருவரை மாற்றியமைக்கக்கூடியது; இவ்வண்ணம் பயனைக் கொடுப்பதற்கு அந்த அறிவும் தன்னை யறியுமறிவாயிருக்க வேண்டும்.

13-6-1945.

165. ஒரு மனிதன் ஏதுமொன்றைச் செய்துவிட்டுச் செய்ததைப்பற்றிப் பின்பு இரங்குவானுயின், அவன் போதிய ஆலோசனையின்றி வலுபந்தங் காரணமாய் அதைச் செய்தானென்பது காணப்படுகிறது.

14-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166. ஏதுமொன்றில் எமக்குப் பற்று உண்டா வதற்கேதுவான முழு வசதிகளும் அமை யும்போதுதான் எமது பற்றின்மை உண் மையாகச் சோதிக்கப்படுகிறது.

15-6-1945.

167. தன்னுடைய குற்றங்களை மறந்துவிட்டுப் பிறருடைய குற்றங்களைப் பார்ப்பது மனிதனிடம் பழக்கமாயிருக்கிறது. இப் பழக்கத்தின் பயனுய் அவன் ஈற்றில் துன்பமடைவது திண்ணம்.

16-6-1945.

168. மனிதனுக்குக் கடவுளை நம்பி வாழ்வது உலகில் ஆகவும் இலகுவான ஒன்ரு யிருக்க வேண்டியது; எனினும், அதுவே ஆகவுங் கடினமானதாய்த் தோற்றுகிறது.

17-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

169. நாங்கள் ஒருவரையொருவர் நம்பாது விடுவதால் எங்களுக்கிடையில் விரோத முண்டாகிறது. இந்த நம்பிக்கையீனம் பயத்தாலுண்டாகிறது.

18-6-1945.

170. பயமின்றி நேசமில்லை என்று பலர் கூறிக்கொள்கின்றனர். உண்மையென்ன வென்றால், எங்கே பயமிருக்கிறதோ அங்கே உண்மையான நேசமில்லை.

19-6-1945.

171. மௌனத்தால் எல்லாம் கைகூடும் என்னும் உண்மையை உணர்த்தும் அனுபவ அறிவு நாடோறும் என்னிடம் வளர்ந்து கொண்டு வருகிறது.

20-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172. பயனற்ற காரியங்களைப் பேசாதும், பயனுள்ளவற்றைச் சுருக்கமான சில சொற்களில் நல்ல விளக்கந் தருவனவாய்ப் பேசியும் வருவோமாயின், எங்கள் நேரத்திலும் பிறருடைய நேரத்திலும் மிச்சப் படுத்துவோம்.

21-6-1945.

173. மேற்கூறியவற்றிலிருந்து அவ்வளவு நேரத்தாலும் எங்களுடைய ஆயுளை நீண்டதாக்கி விடுவோமென்பது தோன்றுகிறது. 22-6-1945.

174. ஒரே காரியத்தை ஒருவகையாய்ப் பார்க்கும்போது அமைதி இழந்து விடுகிறோம். இன்னொரு வகையாய்ப் பார்க்கும்போது சிரிக்கிறோம். நாம் கோபியாது விடுவது அல்லது சிரியாது விடுவது அமையுமாயின் அது நல்லதல்லவா?

23-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175. உண்மையைப் பேசியும், உண்மையாய் வாழ்ந்தும் வரும் ஒருவருக்குப் பெருஞ் செல்வாக்கு இருப்பதை நாடோறுங் காண்கிறோம். எனினும், நாம் அவரைப் பேச்சிலும் செயலிலும் பார்த்துப்பின்பற்றி ஒழுக நினைக்கிறோமில்லை. 24-6-1945.

176. ஒருவன் ஒருதியாகச் செயலை ஆற்றி விட்டு அதற்குப்பின் மனம் வருந்துவானுயின் அது தியாகமாகாது. உண்மையான தியாகத்தால் ஒருவருக்கு மகிழ்ச்சியும் மேன்மையுமுண்டாகும். 25-6-1945.

177. கடவுளால் வருந் துணையே உண்மையான துணை. கடவுளின் துணை யாரும் ஒருவர் வழியால் வரும். ஆகையால், முறிந்த நாணற்புல்லைப்போன்ற ஒருவரென அறிந்திருந்தும் அவரைத் துணையாய்க் கொள்ள நாடாதிருப்பாராக.
26-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

178. "ஓர் எளிமையான வாழ்க்கையால் மாத்திரம் வாழ்க்கையில் உண்டாகும் தீமை குறைவாயுண்டாகும். பரிசுத்தமான வாழ்க்கையால் யாருக்கும் தீமை ஒரு சிறிதும் விளையாது" எனக் குரு ரெக்பகடூர் கூறுகிருர். ஆகையால், எவனொருவன் தீமை புரியாது வாழ்கிருனே, அவனே உண்மைச் சமயத்தைச் சாதிக்கிருன்.

27-6-1945.

179. "இந்தப் பெரும் பாதை வழியே போ" என்று ஒருவர் சொன்னுல், அவ்வழியே காட்டிய திசைப்படி செல்பவன் விரும்பிய இடத்தையடைவது திண்ணம். சத்தியம் அத்தகைப் பெரும் பாதை. அப்பெரும் பாதை வழி செல்வதால், ஒரு மனிதன் கூடிய சீக்கிரம் இலக்கைச் சேர்கிருன்.

28-6-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180. என் வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் இறைவன் சந்நிதானத்திலிருப்பதாயுணர்கிறேன் யானேன் ஆருக்கும் பயப்பட வேண்டும்? 29-6-1945.

181. இன்றைக்கு என்னிடம் வந்த ஒரு மனிதன், "உண்மையான சேவை செய்யாத நாட்களில் எனது வாழ்க்கையே வாழ்க்கை போலில்லை" என்று கூறினன். 30-6-1945.

182. யாரும் உன்னைப் பொய்யனென்றாலும், உன்னை விரோதித்தாலும் சினமெழாது காத்துக்கொள். ஏதும் சொல்ல விரும்பினால் அமைதியுடன் சொல்லு. மௌனமே அப்போதைக்கு ஆகச் சிறந்ததாயிருக்கலாம். நீ உண்மை தவறவில்லையாயின், மற்றவன் உன்னைப் பொய்யனெனக் கூறுவதால் நீ பொய்யனுக மாட்டாய். 1-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

183. சத்தியம் ஆன்மாவை ஊட்டி வளர்க்கிறது. அசத்தியம் ஆன்மாவைத் தேய்த்துவிடும்.

2-7-1945.

184. உண்பதாலடையு மின்பத்திலும் கூடிய இன்பம் உண்ணுது விடும்போது வருகிறது. யார்தானிதை அறியாதார்?

3-7-1945.

185. வதந்திக்குக் காது கொடாதே; காது கொடுத்தாலும் அதை நம்பாதே.

4-7-1945.

186. நாம் விட்ட பிழைகளையும், செய்த குறைகளையுங் கண்டிக்கும் பேச்சை எப்போதும் கேட்க வேண்டும். ஒருபோதும் புகழ்ச்சியைக் கேட்கக் கூடாது.

5-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

187. மனிதனுக்கும் அவனைப் படைத்தவனுக்கும் இடையிலுள்ள உண்மைத் தொடர்பினை நயத்தலிலேயே உண்மை ஞானமுளது.

6-7-1945.

188. ஒன்றே கடவுள். அவருக்கு ஒரு மாறுதலுமில்லை, ஓர் உருவமுமில்லை. நாம் அவரைக் காட்டும் கண்ணுடி. நாம் நேர்மையாகவும் தூய்மையாகவுமிருந்தால், கடவுளின் பிரதிவிம்பமும் அப்படிக் காணப்படும். ஆனுல், நாம் கோணலாகவும் கெட்டவர்களாகவுமிருந்தால், அவருடைய பிரதிவிம்பமும் இத்தன்மைகளைக் காட்டும். ஆகையால், நாம் எல்லாவகையிலும் நேர்மையுடனும் தூய்மையுடனும் இருக்கக் கடப்பாடுடையோம்.

7-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

189. ஒருவரின் குற்றத்தைக் கூறுவதொன்று, அதை நிரூபிப்ப தின்னொன்று.

8-7-1945.

190. ஏகாந்த மினிதெனச் சிந்தித்துத் தெளிந்து, அதை மேற்கொண்ட ஒருவரே அதன் இனிமையை அறிவார்.

9-7-1945.

191. எல்லார் கால்களிலுமுள்ள தூசிக்கிணையாகத் தன்னைத் தாழ்த்தி ஒழுகிக்கொள்பவர் கடவுளுக் கண்மையிலுள்ளவர்.

10-7-1945.

192. சிந்தித்துத் தெளிந்துகொள்ளாத ஒன்றையும் நினைத்தலும், பேசுதலும், எழுதுதலும் ஆகாது. இவ்வகையில் எவ்வளவு நேரத்தை மிச்சமாக்கலாமென்று சிந்தித்துப் பார்.

11-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193. தனக்குள் எவ்விதம் பிரபஞ்சமுளதோ, அவ்விதமே இந்தியாவும் கிராமங்களுக்குள் உளது. 12-7-1945.

194. இந்தியா கிராமங்களில் சீவிக்கிறதென்ருல், ஓர் இலட்சியக் கிராமத்தை அமைத்துவிட்டால், அது முழுத் தேசத்துக்கும் முன்மாதிரியாய் விளங்கும். 13-7-1945.

195. நாம் கிராம நோக்குடன் இந்தியாவைப் பார்ப்போமாயின், நாம் செய்வன பெரும்பாலும் உபயோகமற்றவை எனக் காண்போம். 14-7-1945.

196. மகிழும்பொருட்டல்ல நாம் சீவிக்கவேண்டியது. கடவுளை உணரும்பொருட்டும், மனித சேவையின் பொருட்டுமே யாம் சீவிக்க வேண்டும். 15-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

197. மனித சேவையின்பொருட்டும், கடவுளை உணரும்பொருட்டும் யாம் வாழ்வதென்ருல், யாம் புலன் இன்பங்களை நாடாத தூய வாழ்க்கையே வாழ வேண்டும்.

16-7-1945.

198. ஒரு மீனிஞல் சமுத்திரத்தின் ஆழத்தை எவ்வாறு அளந்தறிய முடியாதோ, அவ்வாறு உலகத்துக்குட்பட்ட ஒருவரால் பிரபஞ்சத்தை விளங்கிக்கொள்ள முடியாது.

17-7-1945.

199. குரு ரெக் பகடூர் கூறுகிருர்: "தீவினை தவிர்ந்து வாழ்வதே ஒரேயொரு வாழ்க்கை நீதி."

18-7-1945.

200. சா உண்மையானது; நிச்சயமானதும். சீவியம் பொய்யானது.

19-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201. தன்னுள் ஆராய்ந்து உண்மையைக் காணலாம்; வெளியே தர்க்கவாதத்தில் உண்மை காணமுடியாது. இதில் 'உண்மை'க்குப் பதிலாகக் 'கடவுள்' ஐ வைத்தால், உண்மையே கூறப்படுகிறது. இரு உண்மைகளும் ஒன்றே.

20-7-1945.

202. நானக் சொல்கிறார், "கடவுள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் உறைகிறார். ஆகையால், ஒவ்வோர் உள்ளமும் ஈசனுறை கோவிலாகும்."

21-7-1945.

203. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஈசனுறைந்தால், யார் யாரைப் பகைக்க முடியும்?

22-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

204. நாணுக் கூறுகிருர், 'கடவுளுடைய சட்டத்துக்குக் கீழ்ப்படிவோமாஞல், மனிதனுண்டாக்கிய சட்டங்களெங்கட்குத் தேவைப்படாது.' 23-7-1945.

205. நாணுக் கூறுகிருர், "உலகில் உள்ள நாமெல்லாம் ஒரு குடும்பமென்றும், நாமொவ்வொருவரும் பிறருக்காக வாழ வேண்டுமென்றும் கடவுள் சட்டம் அமைத்துவிட்டார்." 24-7-1945.

206. அகந்தையின் மறைப்பு இருளின் மறைப்பிலும் மிகவும் அதிகமான மறைப்பைக் கொடுப்பது. 25-7-1945.

207. எவ்வாறு அகந்தை தரும் இருளை அகற்றுவது? எல்லையில்லாத் தாழ்மையாகிய ஒளியால். 26-7-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

208. துன்பம் இன்பத்தின் இன்னொரு தோற்ற மாகும். ஆகையால், ஒன்று மற்றதைத் தொடர்ந்து தவருது வருவதாயிருக்கிறது.

27-7-1945.

209. எவ்வாறு இன்பமும் துன்பமும் ஒன்றை ஒன்று தொடர்ந்து வருகிறதோ அவ் வாறே வாழ்க்கையிலுள்ள எல்லா அனு பவங்களும். இக்காரணத்தால் உண்மை யான மனச்சாந்தியை யாம் பெறுவதற்கு, இவ்வித ஒன்றற்கொன்று எதிரான சோடி அனுபவங்களுக்கு அப்பாற்பட மேலோங்கிச் செல்ல வேண்டும்.

28-7-1945.

210. ஆன்மாவின் உண்மையான பெறுமதியை அறியாதவனுகவும், அப்பெறுமதியைக் காப்பாற்ற முடியாதவனுகவுமுள்ள ஒரு



6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனுக்குச் சீவியம் சம்பந்தமான வேறு எதையும் எவ்வண்ணங் காப்பாற்ற முடியும்?
29-7-1945.

211. உண்மையான ஒரு சொல்லே போதும். உண்மையற்றன எவ்வளவு தொகையானவையெனினும் ஒரு பெறுமதியுமற்றனவாகும்.
30-7-1945.

212. ஒருவரிடம் உள்ள சுயநலத் தன்மையைப் போக்கி, அவரைச் சுயநலமற்றவராக்கும் வல்லபம் ஓர் உண்மைச் சொல்லுக்கு உண்டு.
31-7-1945.

213. கடவுள் உள்ளத்திற் குடிகொண்டிருப்பதாகவும், அவ்விதம் இருப்பதை உணர்வதாகவுமுள்ள ஒருவனே வாழ்வாங்கு வாழ்பவன்.
1-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

214. சமய சாஸ்திரங்களை வெறுமனே படிப்பதால் உண்மை அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஒழுக்கமாய் வாழாது அதைப் பெறுவதரிதென்பது முழுவது முண்மையே. 2-8-1945.

215. தனது சீவியகாலத்தி லொவ்வொரு கணமும் முழு விழிப்புடனிருந்தாலன்றி ஒருவர் சத்தியத்தைக் காண முடியாது. 3-8-1945.

216. சத்தியாக்கிரகிக்கு உரிமைகளென்று ஒன்றுமில்லை. ஓர் உரிமை அவனுக்கு உளது — சேவை செய்வதற்காம் உரிமை. 4-8-1945.

217. ஆகையால், சத்தியாக்கிரகி உரிமைகளென ஒன்றையும் நாடான். அவன் நாடாதிருக்கும்போது இவைகள் தாமாக அவனிடம் வரும். 5-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

218. பொய்யாகிய நஞ்சின் ஒரு துளிதானும் சத்தியமாகிய பால்-சமுத்திரம் முழுவதையும் நஞ்சாக்கிவிடும்.

6-8-1945.

219. நாணக் கூறுகிறார்: "மனிதன் மனுஷியாற் பிறந்தான், மனுஷியும் மனிதனாற் பிறந்தாள்." அப்படியிருக்கும்போது, ஏன் உலகிலே வியபிசார்மாகிய ஒழுக்கக்கேடு காணப்படுகிறது.

7-8-1945.

220. நாணக் திறந்த வெளியில் ஆகாயத்தின் கீழ்ப் படுத்திருந்தார். ஒரு கிருகஸ்தன், "அண்மையிலோர் அழகான தர்மசாலை இருக்கிறது" என்றான். அப்போது நாணக் கூறினார், "முழு உலகுமே எனது தர்மசாலை; ஆகாயமே அதற்குக் கூரை."

8-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221. நானுக் கூறுகிருர்: "இன்பத்தை நாடி இச்சை கொள்வது உண்மையிலொரு பிணி. அப்பிணியை மாற்றுவதற்குத் துன்பம் அல்லது கஷ்டமனுபவித்தலே மருந்தாகும்."

9-8-1945.

222. மறுபடியும் நானுக் கூறுகிருர்: "நீ கொடுத்துவிடுபவை எல்லாம் உன் உடைமை; நீ வைத்திருப்பவை உன் உடைமையன்று."

10-8-1945.

223. நாங்களெடுக்கு மொவ்வொன்றையும் பிறர் வாயிலிருந்து பறித்தெடுக்கிரேம். ஆகையால், நாம் ஒன்றைக் கொள்ளும் போது அது உண்மையில் எமக்குத் தேவையானதென்றும், எமது தேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவுக்குக் குறைவாயிருக்கலாமோ அவ்வளவுக்குக் குறைவாயிருக்கிறதென்றும், பார்த்துக்கொள்ள வேண்டும்.

11-8-1945.

224. "தனது உணவுக்குத் தனது நெற்றியில் வியர்வை நிலத்தில் சிந்தும்வண்ணமுழைத்து, அப்படி உழைத்ததால் வரும் உணவைப் பிறருக்கும் பங்கிட்டு வாழ்பவனே உண்மையில் நேர்மையானவன்."

12-8-1945.

225. நாணக் கூறுகிருர்: "ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவுக்கு அதிகமாக ஆசையை அனுபவிக்கிருனே, அவ்வளவுக்கவ்வளவுக்குத் துன்பமு மனுபவிக்கிருன்."

13-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

226. கதறீனம்மையாரிடங் கையிற் பணமிருக்க வில்லை. அவர் குளிருக்கணிந் திருந்த மேலங்கியே அவரிடமிருந்த பொருள். அதை ஓர் ஏழை தரும்படி கேட்க அதைக் கொடுத்துவிட்டார். அப்போது ஒருவர் அவரை, "எவ்வண்ணம் இனி மேல் உலாவுவாய்?" எனக் கேட்டார். அவர், அன்பாகிய போர்வை எனக்கு அந்த மேலங்கியை விட மேலான பாது காப்பைக் கொடுக்கும்" எனப் பதிலளித் தார். 14-8-1945.

227. பணத்தினுல் மாத்திரம் ஞாபகார்த்த நிறு வனங்களை யாக்கலாம் — இந்தத் தப்பபிப் பிராயத்தால் விளைந்த தீங்கோ மிகப் பெரிது! இன்று மகாதேவதேசாய்க்கு வருடா வருட ஞாபகார்த்த நாளில் இந்த எண்ணமெழுந்தது. 15-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

228. நானுக் கூறுகிருர்: "ஆன்மா புலன்களைத் தனது கருவியாய் உபயோகிக்கிறதெனக் கனுக்களாலறிகிறோம். ஆனல், புலன்களை அடக்கியாளும்போது தான் புலன்கள் உண்மையாய் ஆன்மாவுக்குக் கருவிகளாகின்றன. அப்போது ஆத்மா பரமாத்மாவுடன் கலந்துகொள்வதற்குப் பக்குவமடைகிறது.

16-8-1945.

229. இரைப்பைக்குள்ளே தீனியைத் திணிப்பதால் மாத்திரம் பசி உபத்திரவம் மாறுவதில்லை. மருந்துபோல் சிறிதளவு உணவை உட்கொண்டு அதிற் திருப்திப்படுவதாலும் பசி உபத்திரவம் மாறும்.

17-8-1945.

230. அகந்தையை இல்லாமற் செய்தால் மாத்திரம் பயம் நீங்கும்.

18-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

231. புதினப் பத்திரிகைகளை வாசிப்பது, இந்த நாட்களில், ஒரு தண்டனைக்குள்ளாதல் போலிருக்கிறது. சரியான புதினங்களை அவைகள் கொடுப்பதில்லை. அவைகளை வாசியாது விடுவதால் வரும் நஷ்ட மொன்றுமில்லை.

19-8-1945.

232. செய்ய இயன்ற ஒன்றை இயலாத ஒன்ருக்குவது எவ்வளவுக்கு எளிதோ, அவ்வளவுக்கு அரிது, செய்ய இயலாத ஒன்றைச் செய்ய இயன்ற ஒன்ருக ஆக்குவது.

20-8-1945.

233. செய்ய முடியாததெனத் தோன்றுவது எப்போதும் உண்மையில் அப்படிப்பட்டதல்ல.

21-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

234. ஒரு மனிதன் கடவுளைத் துணையாய்க் கொண்டிருக்கிறான். கோடி மனிதர் சாத்தானைத் தமக்குத் துணையாய்க் கொண்டிருக்கின்றனர். இக்காரணத்தால் ஒருவன் அந்தக் கோடி மனிதருக்கு அஞ்ச வேண்டுமோ?
22-8-1945.

235. இரு பகுதியினருக்கும் கடவுளே துணையென வைத்துக் கொள்வோம். அப்போது யார் யாருக்கு அஞ்சுவது?
23-8-1945.

236. கடவுளை நினைவில் வைத்திருப்பவன் வேறெதையும் மறக்கலாம்.
24-8-1945.

237. ஏனைய எல்லாவற்றையும் நினைவில் வைத்துக்கொண்டு, கடவுளை மறப்பவன் நினைவில் வைத்திருப்பது யாதுமில்லை.
25-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

238. கடவுளை மறப்பவன் தன்னையே மறக்கிருன்.

26-8-1945.

239. ஓர் ஆத்மா உண்டெனில், பரமாத்மாவும் அதாவது கடவுளும் உண்டென்பது நிச்சயமே.

27-8-1945.

240. நாங்கள் சரீரிகளாகையால் எங்களால் கடவுளின் தன்மைகளை மனத்தினுல் சிந்தித்துக்கொள்ள முடியாது.

28-8-1945.

241. அகிம்சையில் நம்பிக்கை வையாத ஒருவன், எவ்வண்ணம் சத்தியத்தில் நம்பிக்கை வைக்க முடியும்? அகிம்சையைச் சாதிக்க முடியாதாயின், சத்தியத்தையும் சாதிக்க முடியாது.

29-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

242. தான் கருதியதைப் பெறுவதற்கு இம்சை புரியுமொருவன், தனது வாக்கிலும் செயலிலும் அசத்தியத்தைக் கைக்கொள்ள ஏன் தயங்கப்போகிருன் ?

30-8-1945.

243. ஒரு மனிதனுடைய வாய்ச் சொல்லாற் சில காரியங்கள் நடந்தேறுகின்றன; மௌனமாய் அவன் இருந்தாலும் சில நடந்தேறுகின்றன; இன்னுஞ் சில அவனுடைய செயலால் நடந்தேறுகின்றன. இப்படி நடந்தேறியவெல்லாம் இம்மூவகையாலும் ஆகுமென அவனறிந்திருந்தாணுயின், உண்மையில் அதுவும் அவனது செயலேயாகும்.

31-8-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

244. பாபத்தைப் பெரிது என்றும் சிறிது என்றும் பாகுபடுத்தலாமென்று எண்ணும் பிழையை யாம் ஒருபோதும் விடப்படாது.

1-9-1945.

245. ஒருவன் ஒரு களவைச் செய்கிருன்; இன்னொருவன் அதற்குத் துணைபுரிகிருன்; இன்னொருவன் களவெடுக்க எண்ணிக்கொண்டிருக்கிருன். மூவரும் கள்வரே.

2-9-1945.

246. நான் செய்த தவறுகள் சிறியன, ஏனையோர் செய்யுந் தவறுகளெல்லாம் பெரியன என்றிவ்வண்ணமாய்ச் சிந்திப்பவன், அறியாமை யிருளுக்குள் மூழ்கியிருக்கிருன்.

3-9-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

247. ஒரு பொய் நாணம் காரணமாய் ஒரு பிழையைச் செய்பவன் இரண்டு வகையிற் குற்றவாளி. அவனுற் கடவுளுக்கு முன்னுல் நிற்க முடியாது.

4-9-1945.

248. கடவுளைச் சாட்சியாய் வைத்துக்கொண்டு எண்ணியும், பேசியும், செயலாற்றியும் வருபவன் சரியானதைச் செய்வதற்கு அஞ்சான்.

5-9-1945.

249. ஒருவன் இது செய்யலாமென்று முழு மனத்தோடு உணர்ந்தாஞயின், அதைச் செய்வது முற்ருய்த் தகுதியற்றதேனும், அவனளவில் அது சரியும் தகுதியுமுள்ளதாகும்.

6-9-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250. எவனொருவன் கடவுளுண்டென்பதில் ஐயுறுகிருனே, அவன் அழிகிருன்.
7-9-1945.

251. கடவுளில்லையென்பவன் தன்னையே இல்லையென்கிருன்.
8-9-1945.

252. மிருகம்போல் நடந்துகொள்பவன் மிருகத்திலுங் கெட்டவன்; மிருகத் தன்மை மிருகத்துக்கு இயல்பாயுள்ளது, மனிதனுக்கு அது இயல்பல்ல.
9-9-1945.

253. பெண் துணையற்றவளல்ல. அவள் தன்னை மனிதனிலும் பலங் குறைந்தவளென் றெண்ணிவிடக்கூடாது. ஆகையால், அவள் மனிதனது கருணையைப் பெறுவதற்கு இரத்தலும் ஆகாது, அவனில் தங்கியிருக்கவுங் கூடாது.
10-9-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

254. அரசகுமாரனென்ருலும் ஆண்டியென்ரு லும் தனது மனச்சாட்சியின்படி நடக்க வேண்டும். தான் செய்யவேண்டியதைத் தானே செய்யவேண்டும். இதில் மகிழ்ச்சியேது, துன்பமேது?

11-9-1945.

255. பல தடவைகளில் ஒரு மனிதனுக்கு எவன் தனது சிநேகிதனென்றும், எவன் தனது சத்துராதியென்றும் அறியமுடியா திருக்கிறது. இது பெரும் ஆச்சரியமா யிருக்கிறது?

12-9-1945.

256. தனது தாய்ப் பாஷையைச் சிறுமைப் படுத்துவது தன் தாயைத் தூற்றுவதற் குச் சமனுகும்.

13-9-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257. நிலத்திலிருப்பதை மேற்கொண்ட ஒருவரை அதிலுங் கீழான ஓர் ஆசனத்திலிருத்த எவரால் முடியும்? அதேபோல், எல்லோரையும் சேவிப்பதற்குத் தானாக முற்படும் ஒருவரை எவரால் ஒரு வேலைக்காரனாக்க முடியும்?

14-9-1945.

258. ஒருவன் கோபத்துக்காளாகும்போதெல்லாம் தனக்கே தீங்கு புரிகிறான். நாளாந்தர அனுபவத்திலிருந்து இதனுண்மையை எவரும் உணர்ந்துகொள்ளலாம்.

15-9-1945.

259. ஒவ்வொரு நாளும் புதிய வாழ்க்கையையே வாழ்கிறோம் இதையறிவதால் நாம் எம்மைத் திருத்தி உயர்வான வாழ்வு வாழ்வோம்.

16-9-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

260. இன்பத்தின் பிறகால் ஓடும்போது அது வும் கானல் நீர்போல் ஓடிப்போய்க் கொண்டேயிருக்கும். இன்பம் அகத்தி லிருந்து வருவது. அது வெளியே கொள்வனவு செய்யப்படும் ஒரு பொரு ளல்ல.

**17-9-1945.**

261. தனக்கும் தன்னுடைய தோழருக்கும் மனப்பூர்வமான ஒற்றுமையில்லையென அறிந்த பின்னும், எவ்வளவுக்கு அவர் களுடன் கூடியுழைக்கலாமென்பது ஆராய வேண்டியது.

**18-9-1945.**

262. கோபமுண்டாகக்கூடிய காரணமுள்ள போதும், கோபியாதிருக்கும் ஒருவரே கோபத்தை வென்றவர் எனலாம்.

**19-9-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

263. உள்ளத்திற் கோபம் நிறைந்திருந்தும் அதை வெளியே தோற்ருவண்ணம் அடக்கிக்கொள்ளும்போது கோபத்தை வென்றதல்ல ஆராய்ச்சியால் வந்த உள்ளத் தெளிவால் வேரொடு கிளையாய்க் கோபம் களைந்தெறியப்பட்டதே கோப வெற்றியாகும்.

20-9-1945.

264. அஜீரணம் முதலியன மாத்திரம் காய்ச்சலை உண்டாக்குவனவல்ல; கோபமும் அதை உண்டாக்கும்.

21-9-1945.

265. பிறரை வெல்வது தன்னை வெல்வதிலும் மிகவும் இலகுவானது; முந்தியது வெளித் துணைகளைக்கொண்டு ஆகும், பிந்தியது தன் மனத்தால் மட்டுமே ஆக வேண்டியது.

22-9-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266. வெறும் சடங்கு மாத்திரமாய்க் கைக் கொள்ளப்படும் சமயம் சமயமாகாது.

23-9-1945.

267. ஒருவருடைய வாழ்க்கையுடன் உள்ளும் புறம்புமாய்ச் செறிந்து சமயம் வந்தால் மாத்திரம் அதைச் சமயம் எனலாம்.

24-9-1945.

268. "காசே கடவுள்" — இப்படிச் சொல்வது தவறு. தவறென்று அது நிரூபிக்கப் பட்டுள்ளது.

25-9-1945.

269. ஒரு பிரமாணத்தை மீறும்போது எல் லாப் பிரமாணங்களும் மீறப்பட்டதா கிறது; ஏனென்றால், அவைகளின் மூலம் ஒன்றே — எப்பிரமாணத்தை மீறினாலும் தன் கட்டுப்பாட்டை மீறுதலே ஆகிறது.

26-9-1945



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

270. எத்தொழிலே மனிதன் செய்தாலும் அது அவன் தன்னே அறிவதற்கு உதவுவதாயிருக்க வேண்டும். தன்னே அறிவதற்குள் கடவுளேயறிதல் மறைந்து கிடக்கிறது.
27-9-1945.

271. கடவுளே வணங்குபவன் அதே கணத்தில் இன்னெருவ மனிதனே அவமதிக்க முடியாது.
28-9-1945.

272. ஒரு மனிதனின் உண்மைத் தன்மையை அவனுடைய இருதயத்திலுள்ள தாழ்மை உணர்ச்சி காட்டிவிடும்.
29-9-1945.

273. ஒரு புலவன் கூறுகிருர்: "அறிவில்லா மனிதன் ஒரு மிருகம் போல்வான்." அந்த அறிவு யாது?
30-9-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

274. ஒரு மனிதனுக்கு எந்த அறிவு தன்னை யறிய உதவுகிறதோ அதுவே அறிவு. அறிவென்பது தன்னை உணர்தல் என்று இன்னொரு வகையிற் கூறலாம்.

1-10-1945.

275. "பட்சமும் தயாளமும் நிறைந்த உள்ள முடையவனாய், துயருறுவோர்பால், இறைவனடியான் நடந்து கொள்கிறானெனினும், அவனுடைய மனத்தில் பெருமிதம் தோன்றுவதில்லை." எமது செயலெல்லா வற்றையுங் கடவுளே செய்விக்கிறாரென்றால் தற்பெருமைக்கு இடமேது?

2-10-1945.

276. கடவுள் நம்பிக்கையுள்ளவன் ஒரு போதும் கலங்கமாட்டான்.

3-10-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

277. நடைமுறையிற் செயற்பட முடியாத கொள்கைகள் சமயமாயிருக்குமா?

**4-10-1945.**

278. தீய நடத்தையைச் சமயப் போர்வையில் மேற்கொண்டால் அது நல்லதாக மாட்டாது; பிழையினது பிழையாந் தன்மையும் மாறுவதில்லை. **5-10-1945.**

279. "சொன்ன சொல்லிலிருந்து தவறுதலிலும் கெட்டழிந்து விடுவது நல்லது." — துளசிதாசர்.

**6-10-1945.**

280. "கோடி பழங்களைக் குவித்தாலும் அது ஒரு மலையாகாது. அவ்வண்ணமே அசத்தியத்தைப் போன்ற பாபம் பிறிதில்லை." — துளசிதாசர்.

**7-10-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281. ஒரு குரு பூரணராயிருக்க வேண்டும். கடவுளே அத்தகையர்.

8-10-1945.

282. கல்வியில்லாத ஒருவனுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். ஆனுல், கொஞ்சம் படித்த ஒருவனை விளங்கச் செய்ய யாரால் முடியும்? 9-10-1945.

283. ஒரு பிரமாணமும் அறியாதவனுகவும், ஒரு பிரமாணத்தையும் பின்பற்ருதவனுகவுமுள்ள ஒருவனுல் தேசத் தொண்டனுக இருக்க முடியாது. 10-10-1945.

284. ஒருவன் இறைநாமத்தைக் கூறியவண்ணம் படுக்கையிற் படுத்ததும் அடுத்த கணம் நித்திரையாய் விடுவானுகில், அது அவனிடம் பற்றில்லையென்பதற்கு ஓர் அறிகுறியாகும். 11-10-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

285. நரசிங்க மேத்தா கூறுகிருர்: "'நான் இதைச் செய்கிறேன்', 'நான் அதைச் செய்கிறேன்' என்று கூறுவதெல்லாம் அறியாமையின் சிகரமாகும்." இதைத் தியானித்து வருவது பற்றின்மையைக் கொண்டுவரும் திறவுகோல் போலாகும்.

12-10-1945.

286. நோயுற்ற உடலைத் தாங்கிக் கொள்ளலாம். ஆனுல், நோயுற்ற மனத்தைத் தாங்க முடியாது.

13-10-1945.

287. நம்மிலுள்ள நன்மைகளையே தேடியெடுத்துப் பிறரிடம் அவைகளைப் புகழ்ந்து பேசுவதைப் பார்க்கிலும் இழிவான குணம் வேறுமுளதோ?

14-10-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288 பிறரிடம் குற்றங்களேயே கண்டு கொண்டிருத்தல் அதிலும் இழிந்தது.

**15-10-1945.**

289. புலனுக்கு அனுபவம் தரும் பொருள்கள் எம்மிடம் வந்துபோகின்றன. இவைகள் தொடர்பில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுவ தொன்றுளது: அவை எம்மை விட்டுப் போகும்போது நாம் துன்புறுகிறேம்; ஆனல், நாமே அவைகளே விட்டுவிடுவோமானல், நாம் அதில் இன்புற்று மகிழ்கிறேம்.

**16-10-1945.**

290. சுயநலமுடைமையைச் சுயநல மின்மையென்று பிழையாய்க் கொள்வது, ஒரு நரியை ஒரு சிங்கமென்று பிழையாய்க் கொள்வது போன்றது

**17-10-1945.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

291. “தூரம் பொருள்களில் மனதுக்குக் கவர்ச்சியை உண்டாக்கிறது” என்னும் வாசகம் மலைகளுக்குப் பொருந்துவது போல் சீவியத்திற் காணப்படும் வேறு எக்காரியத்துக்கும் பொருந்தும்.

18-10-1945.

292. தூய்மையைத் தூய்மையின்மைக் கெதிரில் வைத்துப் பார்க்கும்போதுதான் அது சோதனைக்குள்ளாகிறது. 19-10-1945.

293. தூய்மையைப் பற்றிய உண்மை நல்லன வெல்லாவற்றுக்கும் பொருந்தும். அகிம்சையை இம்சைக்கெதிரிற் சோதித்தறியப் படுகிறது. 20-10-1945.

294. கெட்ட நடத்தை இருளில் வளர்கிறது. பகல் வெளிச்சத்தில் அது அகன்றுவிடுகிறது. 21-10-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

295. அகிம்சை, சத்தியம் ஆதியன சுயம்பிர காசமுள்ளன. அங்ஙனமில்லாவிட்டால் அவை உண்மையான அகிம்சை, சத்தியம் ஆகா.

22-10-1945.

296. நீதியைச் செம்மைப்படுத்துவதற்குத் தயாளகுணம் தேவைப்படுகிறது; அதே விதம் நீதியால் தயாளகுணம் செம்மைப் பட வேண்டும்.

23-10-1945.

297. பிசகா நீதியைக் கூறக்கூடிய ஒருவரே தண்டனையை விதிக்கத் தகுதியுடையவர். கடவுளுக்கன்றி வேறு யாருக்கு இத் தகுதியிருக்கிறது?

24-10-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

298. பேசுவதோ பேசாது விடுவதோ என மனம் ஈடாடும்போது, பேசுவதற்குப் பதிலாக மௌனமாயிருக்க வேண்டும்.

25-10-1945.

299. சமயமானது இவ்வுணவைக் கொள்வது, அவ்வுணவைத் தள்ளுவது என்ற இவைகளில் தங்கியிருக்கவில்லை; அது கடவுளை உள்ளத்தில் உணர்வதிலேயே தங்கியுள்ளது.

26-10 1945.

300. எல்லாரும் ஒரே மாதிரிச் சீவிக்க வேண்டுமென்றால் அது சமயமாகாது; உதாரணமாக, அகிம்சையென்ற சமயம் இம்சைக் கெதிரில் மாத்திரம் தன்னை வெளிக்காட்டுகின்றது.

27-10-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

301. ஒரு தமிழ்ப் புலவர் மனித வாழ்க்கை நீர்மேலெழுத்துப் போல் நிலையற்ற தென்கிறார். திரும்பத் திரும்ப இதைச் சிந்தித்தல் வேண்டும்.

28-10-1945.

302. மது மனிதனுக்கு ஒரு கணத்துக்கு விசரைக் கொடுக்கிறது. ஆனால், பெருமிதம் மனிதனை அரித்தரித்து முற்றாய்த் தின்று விடும். இது அவனுக்குப் புலப்படுவதுமில்லை!

29-10-1945.

303. எதிரி ஒருவனேயாயினும், பலரேயாயினும், தான் தனியனாய்ப் போராடுபவன் சிறந்த ஒழுக்கமுடையவன்.

30-10-1945.

304. வாழுங் கலையை அறியாதவன் சாகுங் கலையை அறியான்.

31-10-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

305. வாழ்க்கையில் வருங் கவலைகளிலிருந்து துறந்துவிடுவதால் வாழ்க்கையின் இன்ப முளது.

1-11-1945.

306. பழங்காலம் எங்கட்குரியது. ஆனுல், நாம் பழங்காலத்தினரல்ல. நாங்கள் தற்காலத்துக்குரியவர். நாங்கள் வருங்காலத்தை உண்டாக்குபவர். ஆனுல், நாம் வருங் காலத்துக்கு உரியவரல்ல.

2-11-1945.

307. உண்மையாகச் சேவை புரிபவனே நல்ல கிருகஸ்தன். அவன் பதில் நன்மை கருதாது கொடுத்துக்கொண்டே வாழ்வான்.

3-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

308 கடுகளவு குற்றத்தை மறைக்க முயலும் போது அது மலையளவினதாகப் பெருக்கிறது. அதைத் திறந்து பேசிவிட்டால் குற்றமே மாறிவிடும்.

4-11-1945.

309. நம்பிக்கை நியாயத்துக்கு அப்பாலானது. ஆனால், அது நியாயத்துக்கு மாறானதல்ல.

5-11-1945.

310. இங்கு மனிதருக்கிடையில் அல்லது இருசன சமூகங்களுக்கிடையிலுள்ள கருத்து வித்தியாசங்களாகிய சிறு குட்டைகளைக் கடப்பதைப் பார்க்கிலும், இரு தேசங்களுக்கிடையிலுள்ள பெருஞ் சமுத்திரத்தைக் கடப்பது இலகுவானது.

6-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

311. இச்சைகட் கிடங்கொடுத்துப் புலனின்பங்களில் மனிதன் மூழ்கும்போது இவைகள் அவனைத் தின்றழித்துவிடும்.

7-11-1945.

312. காலம் செல்லச் செல்ல மனிதன் கிழமடைகிருன்; ஆனுல், அவனுடைய ஆசையென்றும் வாலிப வீறுடன் விளங்குகிறது.

8-11-1945.

313. பற்றின்மையோடு கிரமமின்மை எக்காலமும் ஒத்துப்போதலைக் காண முடியாது.

9-11-1945.

314. பிறர் தன்னை நாணமடையச் செய்யக்கூடிய பாங்கில் தன் கருத்துக்குச் சரியென ஒரு செயலைச் செய்தாலொருவன் செய்தது சற்றுஞ் சரியான செயலாகாது.

10-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

315 லோபி, காமி, கோபி, குடியன் என்ற நால்வரும் சமயத்தை மதியாதாரென விதுரன் கூறும் பதின்மருள் உட்பட்டவர்.

11-11-1945.

316. நாம் வேண்டாம் என்று துறந்துவிட வேண்டிய ஒரு பொருளை அல்லது ஒரு நன்மையை, யாரும் இலவசமாகத் தந்தாலும் அதை வாங்காது மறுத்துவிட வேண்டியது எமது கடமையாயுளது.

12-11-1945.

317. தான் செய்த ஒரு பாவத்தைப் பிறர் யாரும் அறியாதிருக்கவும், தான் அதைச் செய்துவிட்டேனென்று உண்மையான நாணத்தோடு மறைக்காது எடுத்துக் கூறிவிடுமொருவனைப் பிறர்முன் ஒருவராலும் நாணச்செய்ய முடியாது

13-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

318. கனவில்லாத, தூய்மையான ஆழ்ந்த நித்திரையே சமாதியும், தியான யோகமும், கர்மயோகமுமாகும்.

14-11-1945.

319. ஓர் உண்மைப் பக்தனுற் செய்ய முடியாத காரியம் ஒன்றுமேயில்லை.

15-11-1945.

320. ஒரு பக்தன் எப்பொழுதும் கடவுளுடன் கலந்திருக்கிருன்.

16-11-1945.

321. கடவுளிற் கலந்துள்ளவன் வேறு யாரிலாவது கடவுளுக்கன்னியமான வேறெப் பொருளிலாவது கலந்து கொள்ளமாட்டான்.

17-11-194.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

322. ஒருவனுடைய வீட்டையும் அடுப்பையும் பாதிக்கும்படிக்கு ஒரு யாத்திரையை மேற்கொள்வதில்லையென்று சொல்லப் படுகிறது. உண்மையென்னவென்றால், வீட்டையும் அடுப்பையும் முற்றாய்த் துறந்தபின்தான் ஒரு யாத்திரையை மேற்கொள்வது சாத்தியமாகும்.

18-11-1945.

323. துவக்குக்குள்ள பயம் அது சுடுபட்டபின் போய்விடும். அன்பின் பிணிப்பு வரவர இறுகுகிறது. எனினும், அதுவொரு பிணிப்பாய் உணரப்படுகிறதில்லை.

19-11-1945.

324. மனிதனுக்கு உண்மையான பகை காமம், கோபம், பற்று, மதுபானம், பெருமிதம், துன்பம் என்பன ஆகும். அவைகளை வென்றால் ஏனைய பகைகளை இலகுவாய் வெல்லலாம்.

20-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

325. தீமை செய்வது மடைத்தனமென்பது எல்லாருக்கும் உடன்பாடு. ஆனல், ஒரு தகுதி வாய்ந்த நன்மையைப் பெறுவதற்குத தீய வழிகளை மேற்கொள்ளலாமென்பது இன்னும் பெரிய மடைத்தனம் என்றே கொள்ள வேண்டும்.

21-11-1945.

326. ஒரு மனிதன் தான் செய்து ஒப்பேற்ற முடியாத வேலையைச் செய்கிறேனென்று எடுத்துக்கொள்ளாவிட்டால், அவன் கவலைப்படுவதற்கு இடம் வராது.

22-11-1945.

327. ஒரு மனிதனை அவன் விளங்கிக்கொள்ளாத ஒரு காரியத்தைச் செய்யும்படி வலியுறுத்துதல், அவனை மிக மிகக் கடும் தண்டனைக்குட்படுத்துவது போலாகும்.

23-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

328. ஒரு மனிதனைக் கண்டு அவனை எனது சகோதரனெனக் கருதி, அன்பு பாராட்டி வருகிறேன். பின், அவன் எனது சகோதரனல்லனென்று காண்கிறேன். அவனுடைய இயல்பிலவனிருக்கிருன். நான் அவனை விட்டுவிடுகிறேன். இதிற் குற்றமுடையவரார்? 24-11-1945.

329. சிந்தனைக் கெட்டாத ஒன்றைப் பற்றித் தர்க்கிப்பது பயனற்ற செயலன்றி வேறு யாதாகும்? 25-11-1945.

330. எங்களிடம் ஒரு பைத்தியகாரன் வந்து குடியாயிருந்து கொண்டான். அப்போது என்ன செய்ய வேண்டும்? அகிம்சைப் படி செய்யக்கூடிய சிகிச்சை யாது? இதற்கு எளிமையான விடை, அவனைச் சுதந்திரமாக வாழ அநுமதிப்பதொன்றே யாகும். 26-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

331. உழைக்காமல் உண்டுகொண்டிருப்பவன் பிறரிடமிருந்து களவாடப்பட்ட உணவையே உண்கிருன்.

27-11-1945.

332. தனியொரு மனிதன்ருனும் வேலையின்மையால் பட்டினியாய்க் கிடப்பாளுயின், மற்று எவஞெருவஞல் மனவமைதியுடன் சாப்பிட முடியும்?

28-11-1945.

333. உன்னுடைய சட்டைப் பைக்குள்ளே ஒரு பைசா இருக்கிறது. எங்கிருந்து, எப்படி, அப்பைசா அங்கே வந்தது? என்று கேட்டுப்பார். நீ காணும் வரலாற்றிலிருந்து நீ அதிகம் படித்துக்கொள்வாய்.

29-11-1945.

334. பட்டினியாய்க் கிடக்கும் ஒரு மனிதனுக்குக் கடவுள் உணவாகவே தோற்றுவார்.

30-11-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

335. உடுக்கத் துணியில்லாதவர்கட்குத் துணி யைக் கொடுத்து, ஏன் அவர்களை அவ மானப்படுத்துகிறீர்கள்? அவர்கட்கு வேலையைக் கொடுத்துத் துணியை வாங் குவதற்கான காசைத் தமது உழைப் பாற் சம்பாதிக்கச் செய்யுங்கள்.

1-12-1945.

336. சரீர உழைப்பாற் சம்பாதிக்கக்கூடியவர் கட்கு இலவச உணவுச்சாலையை அமைப் பது பாபமாகும். அவர்களுக்கு வேலையை யுண்டாக்குவது புண்ணியமாகும்.

2-12-1945.

337. ஒருபோதும் அணைந்துபோகாததாயும், வளர்ந்துகொண்டே வரும் பிரகாசத்தை யுடையதாயுமுள்ள கடவுள் நம்பிக்கை ஈற்றில் கடவுளுணர்ச்சியாய் மாறுகிறது.

3-12-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

338. சத்தியத்திலேயே உண்மையுளது, நிறத் தோற்றத்திலன்று. 4-12-1945.

339. ஒரு நிர்வாகத்தின் அதிகாரத்துக்கு ஒருவன் அமையும்போது, தற்சுதந்திரத்தை விலைக்குக் கொடுக்கிறனென்பதே அச்செயலின் கருத்தாகும்.

5-12-1945.

340. நிர்வாகத்தின் அதிகாரம் மனிதனுற் பொறுக்கமுடியாத அளவுக்குத் தீதாகும் போது, ஒரு மனிதன் தனது சுதந்திரத்தையேனும் தியாகஞ் செய்து அகிம்சையுடன் கூடிய எதிர்ப்பைச் சாதிக்கிருன்.

6-12-1945.

341. எத்தனை மனிதருளரோ அத்தனை சமயங்களுமுண்டு என்பது உண்மையே. எனினும், சமயத்தின் மூலத்துக்குப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் பார்க்கும்போது உண்மையில் எல்லாச் சமயங்களு மொரு சமயமாய்க் காணப்படும். 7-12-1945.

342. ஒரு கருமத்தைச் செய்து ஒப்பேற்று வதற்கு மேற்கொள்ளும் வழிவகைகளைப் பற்றி யாம் கவனமாயிருந்தால் அதன் முடிவும் தன்னைத் தானே கவனிக்கும். இதையே வழிவகைகளுக்கும் முடிவுக்கும் வித்தியாசமில்லையென இன்னொரு வகை யிற் கூறலாம். 8-12-1944.

343 தன் பிழைகளை ஒழியாது கூறிவிடும் செயல் (confession) ஒரு துடைப்பந் தடி போற் செயலாற்றுகிறது. துடைப்பந் தடி அழுக்குகளைக் கூட்டித் தள்ளுகிறது. இச்செயலும் (நெஞ்சிலுள்ள) அழுக்கை அவ்விதஞ் செய்கிறது. 9-12-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

314. கோடி மக்கள் பொய்யினரா யிருந்தாலும், ஒரு பூரண மனிதனு லத்தனை பேரின் பொய்மையையு மகற்ற முடியும். 10-12-1945.

345. இம்சைக்கு ஓர் எல்லையுண்டு, அது தோல்வியடையும். அகிம்சை எல்லையை அறியாது, அதற்கு என்றுமே தோல்வியில்லை. 11-12-1945.

346. நிலைமை தாங்க முடியாத அளவுக்குக் கஷ்டமாகும்போதுதான் கடவுள் நம பிக்கையின் உறுதி, உறுதியின்மையைக் காணலாம். 12-12-1945.

347. இம்சை பலவீனர்களுடைய ஆயுதம்; அகிம்சை பலவான்களுடைய ஆயுதம். 13-12-1945.

348. தனது உள்ளந் தூய்மையை நிலைநாட்டுவதற்கு விரும்புமெவனும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமை யெல்லாவற்றையும் இழப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

14-12-1945.

349. இந்த உலகத்தைப் பற்றி யாதும் பேசாமல், அப்பாலுள்ள மறு உலகத்தைப் பற்றி யாழை மீட்டுவதுபோல மீட்டிக் கொண்டுமிருக்கும் ஒரு சமயம், சமயமென்ற பெயருக்குத் தகுதியற்றது.

15-12-1945.

350. வறுமைக்குள் அமுக்கப்பட்டிருப்பவன் வறுமையாய் வாழ வேண்டுமென்று வறுமையை மேற்கொள்பவனல்ல.

16-12-1945.

351. கற்பொழுக்கத்துக்கு முக்காடு போடும் காவல் தேவையில்லை. அதற்குத் தெய்வத்தின் காப்பு மாத்திரமே தேவை.

17-12-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

352. தன் கடமையை ஆற்றுவதனுல் சம்பாதிக்கப்படும் உரிமையே நிலையானது.

18-12-1945.

353. பூமியின் வயிற்றுக்குள்ளே பொன்னும் வைரமும் புதைந்து கிடக்கும்வரையும், அவைகள் எவருக்கும் பயனற்றவை. மனிதனது பணி அதைத் தோண்டி வெளியேயெடுத்து, அதற்குப் பெறுமதியைக் கொடுக்கிறது. இப்படிப் பார்க்கும்போது பணிபுரிந்த தொழிலாளியே அவைகளை உண்டாக்கியவன் என்பது வெளியாகிறது.

19-12-1945.

354. எவ்வாறு நான் உண்பதற்கும் குடிப்பதற்கும் எனக்கு உரிமை உண்டோ, அவ்வாறே எனது வேலையை யான் விரும்பியவண்ணம் செய்வதற்கும் எனக்கு உரிமையுண்டு. இதுவே சுயராச்சியம்.

20-12-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

355. பிறர் என்ன அபிப்பிராயம் தெரிவிக்கின்றனரென அறிய ஆசைப்படாதே. அல்லாமல் உனது நோக்கமும் அதை அடிப்படையாய்க் கொள்ளாதிருக்கட்டும். தனது சுயேச்சைப்படி எண்ணிக்கொள்வது ஒருவரது அஞ்சாமையைக் காட்டும்.

21-12-1945.

356. புயல் எவ்வளவு பயங்கரமாயடிப்பினும், இருள் எவ்வளவு மறைப்பாயிருப்பினும், கடவுள் எம்மைப் பாதுகாப்பவராகவும், எமது கூட்டாளியாகவுமிருக்கும்போது, யாம் ஏன் அல்லது யாருக்கு அஞ்ச வேண்டும்?

22-12-1945.

357. முழுமையான அகிம்சைக்கண் பகைமை சற்றும் தோன்றுவதில்லை.

23-12-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

358. அகிம்சை பெருந்தொகையான மனித ருடைய நன்மைக்கென்று தொழிற்படுவ தில்லை அது எல்லாருடைய நன்மைக்கு மாகத் தொழிற்படுகிறது. அகிம்சையை விரதமாய்க் கொண்ட ஒருவன், எல்லா ருடைய நன்மையையும் பெறுவதற்குத் தேவை வரும்போது தன்னுடைய உயி ரையும் விடுவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். 24-12-1945.

359. வணக்கம் உள்ளத்திலிருந்து எழ வேண் டும், குரலிலுண்டாவதல்ல. உள்ள உணர்ச்சியில்லாவிட்டால் சொற்களுக்குப் பொருளில்லை. 25-12-1945

360. தூய்மை புறக்காவலைக் கோரி நிற்ப தில்லை. 26-12-1945.

361. எங்களுக்கு ஆகப் பெரும் பகைவன் அன்னியனல்ல, அல்லது வேறெவனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்ல; நாமே எங்கள் பகைவர். அதா வது, எங்கள் இச்சைகளே. 27-12-1945.

362. எவனொருவன் யாருக்காவது அடிமை யாவதை விரும்பவில்லையோ, அவன் கட வுளுக்கு அடிமையாக வேண்டும்.
28-12-1945.

363. இம்சையால் வருவதாகத் தோன்றும் நன்மை, தோற்றம் மாத்திரத்தில்தான் உளது. அதனால் வரும் தீமை என்றும் நிற்கும். ஆகையால், இம்சையைத் தவிர்க்க வேண்டும். 29-12-1945.

364. தன் எண்ணங்களால் உருப்பெற்ற ஓர் உருவமே மனிதன். 30-12-1945.

365. உண்மைச் சமயம் தேச எல்லையை அறி யாது. 31-12-1945.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும்
நயம்வர வாய்ப்பான வழியை நாடுதல்
உத்தமமல்லவா!

நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய,
எமது உற்பத்திப் பொருள்களை
வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்

# மில்க்வைற்
# சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12,

தொலைபேசி: 36063

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org